Registered as a Newspaper in Ceylon ★ ★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 76

National Tamil Daily [illegible] தினசரி

(28 4 65)

விசுவாவசு சித்திரை 16 துல்ஹஜ் பிறை 24 புதன்கிழமை

## 90 மைல்களை கடக்க ஒரு வருடம் !!

யாழ்ப்பாணத்துக்கும் வவுனியாவுக்கு மிடையேயுள்ள தூரம் 90 மைல்கள் மட்டுமே. இந்த தொண்ணூறு மைல்களை கால்நடையாக நடந்து சென்ருலும் கூட கூடியது பத்து தினங்களில் சென்றடைந்துவிடலாம். ஆனல் ஆயிரம் மைல்களை அரை நிமிடத்தில் கடந்துசெல்லக்கூடிய அளவுக்கு வளர்ந்துள்ள விஞ்ஞான யுகத்திலே யாழ்ப்பாணத்திலிருந்து 1964-ம் ஆண்டு மார்ச் மாதம் 28-ந் திகதி வவுனியாவில் உள்ள ஒருவருக்கு அனுப்பப்பட்ட 100 ரூபாவுக்கான காசுக் கட்டளை இன்னும் அவருக்குக் கிடைக்கவில்லை என்ருல் இலங்கைத் தபால் பகுதியின் கெட்டித்தனம் எம்மட்டு என்பதை சொல்லித் தெரியவேண்டியதில்லையே! யாழ்ப்பாணத்தைச் சேர்ந்ததம்பாபிள்ளை யாழ்ப்பாணம் தபால் நிலையத்திலிருந்து கடந்தவருடம் மார்ச்ச மாதம வவுனியாவில் உள்ள கே. கதிரவேலு என்பவரின் பெயருக்கு 100 ரூபாவுக்கு காசுக்கட்டளை அனுப்பியிருந்தாராம். அந்தக் காசுக்கட்டளைக்கு என்ன நேர்ந்தது, எங்கே இருக்கிறது என்பது எவருக்குமே தெரியாது. இது குறித்து தபால்பகுதி மா அதிகாரிக்கு புகார்செய்துங்கூட எவ்வித பயனுமில்லை.

தபால், தந்தி இலாகாவிலேயே தாமதம் பேர் போன ஒன்றென்றும், தந்திகள், காசுக்கட்டளைகள், தந்தி காசுக்கட்டளைகள் போன்றவை அநேகமாக தாமதமாகியே வினியோகிக்கப்படுவதாகவும் பொதுவாக புகார் கூறப்படுகிறது.

# இந்திய வட எல்லையில் 40,000 சீனத் துருப்புகள்

## தமிழ்பேசும் அரசாங்க ஊழியர் நிலைமை

### 3 மந்திரிகளுடன் இன்று தமிழரசுத் தலைவர்கள் சந்திப்பு

யாழ்ப்பாணம், புதன்

தமிழ்அரசாங்க ஊழியர் சம்பந்தமாக ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன, நிதி மந்திரி திரு யு. பி. வன்னிநாயக்கா, ஸ்தல ஸ்தாபனமந்திரி திரு. எம். திருச்செல்வம் ஆகியோரை தமிழரசுக்கட்சித் தலைவர் திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகமும் பொதுக்காரியதரிசி திரு. ஏ. அமிர்தலிங்கமும், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினமும் இன்று பிற்பகல் சந்தித்துப்பேசவிருக்கின்றனர்.

இப் பேச்சுவார்த்தைகளில் தமிழ்பேசும் அரசாங்க ஊழியரின் முக்கியமான பிரச்னைகள் பற்றி ஆராயப்படவிருப்பதாகத் தெரிகிறது.

சிங்களம் மட்டும் சட்டம் காரணமாக தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கெதிராக நிர்வாகரீதியிலும் சட்டரீதியாகவும் சென்ற சிலவருடங்களாகக் காட்டப்பட்டுவந்த பாரபட்ச நடவடிக்கைகளுக்கு முற்றுப்புள்ளி வைப்பதுபற்றியும் தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு இதர அரசாங்க ஊழியர்களுக்குள்ள வசதிகளை அளிக்கவேண்டியது பற்றியும் இப்பேச்சுவார்த்தைகளின்போது ஆராயப்படுமெனத் தெரிகிறது.

சிங்களம் தெரியாத என்ற காரணத்துக்காக தமிழ்பேசும் அரசாங்க ஊழியர்களுக்கு நிறுத்தப்பட்ட சம்பளஉயர்வு, உத்தியோகஉயர்வு ஆகியவை பற்றி இப்பேச்சுவார்த்தைகளில் ஆலோசனை செய்யப்பட்டு ஒரு முடிவு செய்யப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்பேசும் அரசாங்க ஊழியரின் தற்போதைய பிரச்னைக்கு ஒரு தீர்வு கண்டு கொண்டபின் அரசாங்கசேவையில் இருப்பவர்களும் இனி புதிதாக அரசாங்கசேவையில் சேருபவர்களும் சிங்களம் படிப்பது சம்பந்தமாக தமிழரசுக்கட்சி ஆராயுமெனத் தெரியவருகிறது.

## இந்திய-பாக். சண்டையில் 365 பேர் மாண்டனர்

### பியர்பேட்டின் வடக்கே பாக். துருப்புகள்வாபஸ்

புதுடில்லி, ஏப். 27

இந்தியாவின் கட்ச்—ரான் பகுதியில் கடந்த இரு தினங்களாக நடைபெற்ற இந்திய—பாகிஸ்தான் எல்லைச்சண்டையில் மொத்தம் 365 பேர் மாண்டிருக்கின்றனர் என்று இன்று இரவு கடைசியாக கிடைத்த செய்திகள் கூறுகின்றன. நேற்றைய சண்டையில் பாகிஸ்தான் தரப்பில் 140 துருப்புகளும் இந்தியா தரப்பில் 10 துருப்புகளும் மாண்டனர்.

இருநாள் சண்டையிலும் இந்தியா தரப்பில் பொலிஸார் உட்பட 65 பேரும் பாகிஸ்தான் தரப்பில் 300 பேரும் உயிரிழந்தனர் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. எல்லையில் இன்று சண்டை நடைபெருதபோதிலும் நிலைமை மோசமாகவிருக்கிறதென்றும் புதிய தாக்குதல்கள் பலமாகவிருக்கலாம் என்றும் கடைசியாகக் கிடைத்த செய்திகள் கூறுகின்றன.

பியர்கேட் மீது தாக்குதல் நடத்திய பாகிஸ்தான் துருப்புகள், நீண்ட நேர சண்டைக்குப் பின்னர் பியர்பேட்டின் வடக்கிலிருந்து வாபஸ் பெற்றனர்.

எல்லைச்சண்டை தீவிரமாகலாம் என்றும் சீன – பாகிஸ்தான் தாக்குதலை சமாளிக்கவேண்டிய நிலை இந்தியாவுக்கு ஏற்படலாம் என்றும் வெளிநாட்டு பார்வையாளர்கள் அபிப்பிராயம் தெரிவித்துள்ளனர். இந்தியாவின் வட எல்லையில் 40,000க்கும் அதிகமான சீனத் துருப்புகள் குவிந்துள்ளனர்.

### சீனர்கள் குவிகின்றனர்

இதற்கிடையில் இந்தியாவின் வட எல்லையில், பாராஹோதிக்கருகில் 13 முதல் 15 டிவிஷன் சீனத்துருப்புக்கள் குவிந்துள்ளதாயும், இந்த எண்ணிக்கை 1962 அக்டோபர், நவம்பர் மாதத்திய சீனத்தாக்குதலின் போது இருந்ததை விட மிக அதிகமானது என்றும் பாதுகாப்பு மந்திரி சாவன் அறிவித்தார். (ஒரு டிவிஷன் என்பது 2000. முதல் 3000. துருப்புக்களைக் கொண்ட பூரண ஆயுதபாணிகளைக் கொண்ட படை). திபேத்தில் சீனவுக்குச் சொந்தமான ஏராளமான நவீன விமானநிலையங்கள் வேறு இருக்கின்றன.

உள்நாட்டு மந்திரி திரு. நந்தா லோகசபையில் பேசிய போது சீனர்களின் ஆயத்தம் பற்றி உன்னிப்பாகக் கவனித்துவருவதாய்க் கூறினர். இந்திய மக்கள் ஒன்றுபட்டிருக்கிறர்கள் என்றும், தங்கள் எல்லைகளைக் காக்க அவர் உயிர்த்தியாகம் புரிவார்கள் என்றும் நந்தா அறிவித்தார்.

இந்தவித தாக்குதல்களைச் சமாளிக்க ராணுவம், பந்தோபஸ்துப்படை ஆகியவற்றுடன் அனைவரும் ஒன்றுபட்டிருக்கவேண்டும் என்றும், அரசாங்கம் தீவிர நெருக்கடி காலத்தில் இருக்கிறது என்பதை உணர்த்தவேண்டும் என்றும் திரு. நந்தா கூறினர்.

#### பகைவர்களை ஒடுக்குவோம்

"வேலை நிறுத்தங்களும், வேறுபாடுகளும் நிற்கவேண்டும். நாட்டில் கலகம் எதையும் அனுமதியோம். நாட்டிலுள்ள பகைவர்களை ஒடுக்குவோம்" என்றும் நந்தா அறிவித்தார்.

#### எதற்கும் தயார் நிலைமை

சீனத்துருப்புக்கள் குவிந்துள்ளதை முன் ஜாக்கிரதையுடன் அவதானித்து வருவதாயும், சீனவும், பாகிஸ்தானும் ஏககாலத்தில் தாக்கினலும் அவற்றைச் சமாளிக்க இந்தியா தயாராகவிருக்கிறது என்றும் பாதுகாப்பு மந்திரி சாவன் அறிவித்தபோது பெரும் கரகோஷம் எழுந்தது.

## வாலிபமுன்னணியின் நல்ல முயற்சி

காங்கேசன்துறை, செவ்வாய்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் ஏற்பட்டுள்ள தட்டுப்பாட்டைபோக்குவதற்கான முயற்சியில் அகில இலங்கை தமிழ்க்காங்கிரஸ வாலிபமுன்னணிக் கிளைகள் ஈடுபட்டுள்ளன.

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம், திரு. க. ஸ்ரீ ராஜசேகரன் ஆகியோர் இதற்கான முயற்சிகளில் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். அடுத்த வாரத்தில் ஏராளமான வாலிபர்கள் இந்த வங்கியில் இரத்த தானம் செய்ய முன்வந்துள்ளனர்.

### கடைசிச் செய்தி

பியர்பேட்டில் இந்திய - பாகிஸ்தான் துருப்புகளுக்கிடையே நடைபெற்ற சண்டை நின்றது. இச் சண்டையில் போர்ஸைநாவிய டாங்கிகளை இந்தியத் துருப்புக்கள் அழித்தன ஏராளமான பாகிஸ்தானியர்கள் கொல்லப்பட்டனர்.

மழையால் பாதிக்கப்பட்ட

## தீவுப்பகுதிப் புகையிலைச் செய்கையாளருக்கு உதவி

### புள்ளி விபரம் சேகரிக்கத் தீர்மானம்

யாழ்ப்பாணம், புதன்

சென்ற வருடம் மாசி பங்குனி மாதத்தில் பெய்த அகால மழை காரணமாக தீவுப்பகுதியில் பாதிக்கப்பட்ட புகையிலைப் பயிர்ச்செய்கையாளர்களுக்கு ஏற்பட்ட நஷ்டம் குறித்து புள்ளி விபரம் சேகரிக்க தீவுப்பகுதிக் காரியாதிகாரி மூலம் நடவடிக்கை எடுப்பதென்று நேற்று நடைபெற்ற யாழ்ப்பாண மாவட்ட விவசாயக்குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

சென்ற வருடம் பெய்த அகால மழை காரணமாக நெடுந்தீவு, புளியங்கூடல். கரம்பன், காரைநகர், வேலணை ஆகிய தீவுப்பகுதிகளில் புகையிலைப் பயிர்கள் முற்ருக அழிந்துவிட்டதாகவும் அவர்களுக்கு நிவாரண உதவி வழங்கவேண்டியது மிக மிக அவசியமென்றும் தீவுப்பகுதி எம். பி. திரு. வ. நவரத்தினம் மாவட்ட விவசாயக்குழு கூட்டத்தில் வலியுறுத்தினர்.

யாழ்ப்பாணம் கச்சேரியில் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜெயவீரா தலைமையில் இக்கூட்டம் நேற்று நடைபெற்றது.

புகையிலைப் பயிர்ச்செய்கையாளருக்கு ஏற்பட்ட நஷ்டம் பற்றி காரியாதிகாரி மூலம் புள்ளிவிபரம் சேகரித்து பின் [illegible] மானித்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### பொன்வாக்கு

நாட்டில் வறுமையும் வேலையில்லாத் திண்டாட்டமும் உயர்ந்தவன், தாழ்ந்தவன் என்கிற பாகுபாடும் நீடிக்கும்வரையில் சோஷலிஸத்தைப் பற்றிப் பேச நமக்கு யோக்கியதை இல்லை.

— மகாத்மாகாந்தி


# ஈழநாடு

தமிழ் தேசிய தினசரி

EELA NADU National Tamil Daily, Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 289.

ஸ்ரீ விசுவாவசு ஆண்டு சித்திரை 16 உ (28-4-65)


## இந்திய எல்லை நிலைமை

இந்திய-பாகிஸ்தான் எல்லையில் கைகலப்பு ஏற்பட்டிருப்பதும் இரு நாடுகளும் யுத்த முஸ்தீபு செய்துள்ளதும் உலக அமைதியை விரும்பும் மக்களுக்குக் கவலையளிப்பதாகும்.

இந்தியாவைப் பொறுத்தவரையில் சுதந்திரம் பெற்றகாலிலிருந்து சமாதானக் கொள்கையையே அது பின்பற்றிவருகிறது. சகல நாடுகளுடனும் சமாதான சகவாழ்வு, வல்லரசு முகாம்களில் சேராத நடுநிலைமை இந்தியாவின் கொள்கை. ஐந்தாண்டுத்திட்டங்கள்மூலம் நாட்டை அபிவிருத்தி செய்வது, பாதுகாப்பு இராணுவச் செலவைக் கட்டுப்படுத்துவது அணு ஆயுதங்களைத் தவிர்ப்பது, யுத்தம், ஆயுதஉற்பத்தி ஆகியவைகளில் ஈடுபடாமலிருப்பது ஆகியவை இந்தியாவின் முக்கியமான உள்நாட்டுக் கொள்கைகள்.

ஆனால் நடுநிலைமைக் கொள்கையையும் வல்லரசு இராணுவ முகாம்களில் சேராக் கொள்கையையும், இந்தியா பின்பற்றிய போதிலும் மேற்கத்திய கிழக்கத்திய வல்லரசுக் கோஷ்டிகள் இந்தியாவுக்கு மறைமுகமாகவும் நேர்முகமாகவும் தொல்லை விளைவித்தன. இதன்மூலம் பின்தங்கிய ஒருநாட்டின் முன்னேற்றத்துக்கு மறைமுகமாக இடையூறு விளைவிக்கின்றன. இவ்விதம் இந்தியாவின் முன்னேற்றத்துக்கு முதல் முதலில் மறைமுகமாக இடையூறு செய்த நாடு மேற்கத்திய வல்லரசான அமெரிக்காவேயாகும். அமெரிக்கா பாகிஸ்தானுக்கு ஆயுதங்கள் வழங்கியது, வடஅத்திலாந்திக் ஒப்பந்த ஸ்தாபனம் (நேட்டோ) தென்கிழக்காசிய ஒப்பந்த ஸ்தாபனம் (சியாட்டோ) மத்தியநாடுகள் பாதுகாப்பு ஒப்பந்த ஸ்தாபனம் (சென்டோ) ஆகிய இராணுவ கூட்டு முகாம்களில் பாகிஸ்தானை அமெரிக்கா அங்கத்துவநாடாக்கியது. பாகிஸ்தானின் விமானப்படையை விஸ்தரித்து இன்று உலகிலுள்ள வலிமை பொருந்திய விமானப்படைகளில் பாகிஸ்தான் ஆறுவது ஸ்தானத்தில் வைத்துக் கணிக்கப்படுவதற்குக் காரணகர்த்தா அமெரிக்காதான். இதனால் தனது பாதுகாப்புக்கும் எந்த நெருக்கடி நிலையையும் சமாளிப்பதற்கும் இந்தியா தனது இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டியேற்பட்டது.

இதன்பின் கிழக்கிய நாடுவில் சக்திவாய்ந்த ஒரு தேசமாக விளங்கும் சீனா, இந்தியாவுடன் எல்லை காரணமாகத் தகராறை ஏற்படுத்திக்கொண்டது. சீனாவின் தேசியக் கொள்கைகளுக்கு இந்தியா பூரண ஆதரவளித்து வந்ததுடன் உலக மாமன்றமாகிய ஐ நா. சபையில் சீனாவுக்கும் அங்கத்துவம் அளிக்க வேண்டுமென வாதாடிவந்துள்ளது. திபெத்தைக் கைப்பற்றிக் கொண்ட சீன மக்கோகன் எல்லையைத் தாண்டி இந்திய எல்லைக்குள் புகுந்து தனது படைபலத்தைக் காட்டியுள்ளது. இப்பொழுது அது அணு ஆயுதங்களை உற்பத்தி செய்யவும் ஆரம்பித்துள்ளது. சீனாவின் நடவடிக்கைகளிலிருந்து ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நிலைநாட்டவே அது எண்ணம் கொண்டுள்ளதெனக் கருதுவதற்கிடமுண்டு.

இந்திய-சீன எல்லைத் தகராறுக்குப் பின்னர் சீனாவுக்கும் பாகிஸ்தானுக்குமிடையில் நட்புறவு அதிகரித்துள்ளது. அமெரிக்காவிடமிருந்து பெற்ற ஆயுதங்களும் சீனாவின் ஆதரவும் இப்பொழுது பாகிஸ்தானுக்கு இருக்கிறது. இந்தியாவுடனான எல்லைத் தகராறைக் கைவிட்டுவிடவில்லை. எனவே இந்திய எல்லைகளில் இப்பொழுது நெருக்கடி யுத்தத்துக்கும் மிஞ்சிய ஒரு நிலை தோன்றியுள்ளது. சுயகௌரவமுள்ள நாடு என்ற முறையில் ஆக்கிரமிப்பை இந்தியா எந்தவிதத்திலும் எதிர்த்துத் தடுத்தாக வேண்டும். இதனால் அபிவிருத்தித் திட்டங்களில் கொண்டுள்ள கவனத்தைப் பாதுகாப்புக்கு மாற்ற வேண்டிய பர்ப்பந்தம் அண்டை நாடுகளின் ஆக்கிரமிப்பு மிரட்டல்களால் இந்தியாவுக்கு ஏற்பட்டுள்ளது.

உலக சமாதானத்தில் வல்லரசுகளுக்கு உண்மையில் நாட்டமுண்டானால் அமைதியாக முன்னேற விரும்பும் ஒருநாடு இராணுவ நடவடிக்கைகளாலும் ஆக்கிரமிப்பு நோக்கங்களாலும் தொல்லைக்குட்படும் போது அந்த நிலைமையைச் சமாளிக்க ஐ. நா. ஸ்தாபனத்துக்குத் தகுதியில்லையா? சென்ற ஒருவார காலமாக இந்திய எல்லையில் நடைபெற்றுவரும் வெறியாட்டச் செயல்கள்பற்றி வல்லரசுகளும் ஐ. நா ஸ்தாபனமும் சிறிதளவாவது சிரத்தை எடுத்திருந்தால் நிலைமை இவ்வளவு மோசமடைந்திருக்காது.

## வானொலி ஆலோசனை சபை

கொழும்பு, செவ்வாய்

இலங்கை வானொலி நிலைய ஆலோசனைச் சபையின் தகவல் ஒலிபரப்பு மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவால் விரைவில் அமைக்கப்படும். இலங்கை வானொலியில் ஒலிபரப்பாகும் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கும் பெருமளவு ஆலோசனைச் சபைகள் இருந்தபோதிலும் கடந்த இரண்டு வருடகாலமாக அவைகள் கூட்டில்லையென்று கூறப்படுகிறது. வர்த்தக ஒலிபரப்பைச்சேர்ந்த ஆலோசனைச் சபை கடந்த மூன்றுவருடகாலமாக கூடி ஆலோசனை நடத்தவில்லை யென்று சொல்லப்படுகிறது.

எண்ணெய்க் கம்பனிகளுக்கு

## நஷ்ட ஈடுவழங்குவது குறித்து பேச்சுவார்த்தை

பம்பலப்பிட்டி, செவ்.

இலங்கை எண்ணெய் கூட்டுஸ்தாபனத்தினால் எடுக்கப்பட்ட எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடு கொடுப்பது பற்றி இலங்கை அரசாங்க அதிகாரிகளுடன் வெளிநாடுகளிலிருந்து இலங்கை வந்துசேர்ந்த மூன்று பிரதிநிதிகள் பேச்சுவார்த்தைகள் நடத்தினார்கள்

நஷ்டஈடு கொடுப்பது சுமுகமான முறையில் தீர்க்கப்பட்டால் அமெரிக்கா இலங்கைக்கு மீண்டும் உதவி அளிப்பது பற்றி தீர்மானிக்கும் என்று அமெரிக்க அரசாங்கம் கருத்து தெரிவித்துள்ளது. அமெரிக்கா அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் இலங்கைக்கு வழங்கும் உதவியை 1963-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் தொடக்கம் நிறுத்தியுள்ளது. பத்துப்பேர் அடங்கிய நஷ்டஈடுசபை திரு. எம். எம். ஐ. க. தியப்பர் தலைமையில் எண்ணெய்க் கம்பெனிகளின் சொத்துக்களை 3 கோடி என மதிப்பிட்டிருந்தது. ஆனால் இதற்கு முன்னர் இலங்கை எண்ணெய் கூட்டுஸ்தாபனத்தினர் சொத்துக்களை இரண்டரைக்கோடி யாக மதிப்பிட்டிருந்தனர். எண்ணெய்க் கம்பெனிகள் தங்கள் சொத்துக்களை 10 கோடி என மதிப்பிட்டிருந்தனர்.

கூட்டரசாங்கத்தின் காலத்தில் நிதி மந்திரியாக கடமையாற்றிய டாக்டர் என். எம். பெரேரா எண்ணெய்க் கம்பெனிகளுக்கு நஷ்டஈடாக 4 கோடியை கொடுப்பதற்கு ஒத்துக் கொண்டிருந்தார். ஆனால் ஷெல் எண்ணெய்க் கம்பெனி முன்னைய அரசாங்கம் நியமித்த நஷ்டஈடு சபையை ஆட்சேபித்து இரண்டு வழக்குகளை சுப்றீம் கோர்ட்டில் 1964-ம் ஆண்டு ஜூன் மாதம் தாக்கல் செய்திருந்தது. இந்த வழக்கில் தீர்ப்பு இன்னமும் வழங்கப்படவில்லை.

## பாராட்டுத் தீர்மானம்

வல்வெட்டித்துறை, செவ்.

இலங்கைத் தமிழரசுக்கட்சி வாலிப முன்னணி வல்வெட்டித்துறை கிளையின் ஆரம்ப கூட்டம் திரு. வி. அமிர்தேலவராசா தலைமையில் நடைபெற்றது.

திரு. செல்வநாயகத்தின் தலைமையின்கீழ் இயங்கும் தமிழரசுக்கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் சேர்ந்து தேசிய அரசாங்கத்தை அமைத்ததற்கு இவ்வாலிப முன்னணி நன்றி தெரிவிப்பதோடு இந்நாட்டை சர்வாதிகார ஆட்சி அடிகோலவிடாமல் ஜனநாயக ஆட்சி வளர்த்தோங்க எடுக்கப்பட்ட தீர்ப்புக்கு திரு. செல்வநாயகத்தைப் பாராட்டுகிறோம் என்னும் தீர்மானம் இக்கூட்டத்தில நிறைவேற்றப்பட்டது.

நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்:-

தலைவர்: வி அமிர்தேலவராசா, உபதலைவர்கள்: வேணுகோபால் தெ லெட்சுமிகாந்தன், இணைச்செயலாளர்கள்: து. யோகரத்தினராசா, ஆ தங்கவேலாயுதம், பொருளாளர்: ஸ்ரீ க ணேசவேலாயுதம், போஷகர்: க துரைரத்தினம், நிர்வாகசபை உறுப்பினர்களாக பத்துப் பேர் தெரிவுசெய்யப்பட்டனர்

## கிராம சபையின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், புதன்

"ஜனநாயகத்தையும் தேசிய ஒற்றுமையையும் பாதுகாக்க உறுதிகொண்ட தாங்கள் பிரதம மந்திரியாகப் பதவி ஏற்றமையையிட்டு எமது சபை மிக மகிழ்ச்சியடைகின்றது. உங்கள் ஆட்சியில் மக்கள் அனைவரும் சாதிசமய வேறுபாடின்றி சகல உரிமைகளோடும் வாழ்வார்கள் என நம்புகின்றோம். எமது சபையும் உங்களுக்குப் பூரண ஒத்துழைப்புத்தர ஆயத்தமாக இருக்கின்றது என்பதை அறியத்தருகின்றோம்" என்று அச்சுவேலி கிராமசபை பிரதமந்திரிக்கு அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளது.

## தரம் உயர்த்த கோரிக்கை

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் கனிஷ்ட தொழில் நுட்ப பாடசாலையைத் தரம் உயர்த்துவதென 1958-ம் ஆண்டிலிருந்தே பார்லிமெண்டில் பல கூறப்பட்டிருந்தும் இன்னும் அவ்விதம் செய்யப்படவில்லை என்றும், உடனடியாக தரம் உயர்த்தும் வேலையை தொடங்க அதிகாரிகளுக்கு உத்தரவு விடுமாறு கல்வி மந்திரிக்கு அனுப்பி வைத்துள்ள மகஜரில் இளைப்பாறிய ஆசிரியர் திரு. ஆ கணபதிப்பிள்ளை கோரியுள்ளார். தொழிற்கல்வி விசாரணைக் குழு அறிக்கையிலும் இப் பாடசாலையின் தரத்தை உயர்த்தும்படி சிபாரிசு செய்யப்பட்டிருப்பது மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது

## வாலிப முன்னணி மேதின விழா

யாழ்ப்பாணம், திங்கள்

தமிழ்சு வாலிப முன்னணியினர் மேதின விழாவை மொழிவழித் தொழிற்சங்கங்களின் ஆதரவுடன் யாழ்ப்பாணத்தில் நடத்தவிருக்கின்றனர். அன்று விவசாய தொழிலாள மக்களின் சார்பில் மாட்டுவண்டி ஊர்வலமொன்றும் நடைபெறவிருக்கிறது.

## சனசமூக நிலைய நிறைவு விழா

யாழ்ப்பாணம், புதன்

அளவெட்டி வடக்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும், 17-வது ஆண்டு நிறைவு விழாவும் சென்ற சனிக்கிழமை நடைபெற்றது. நிலையத் தலைவர் வ. க. செல்லத்துரை தலைமையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் நிலையத்தின் வளர்ச்சி குறித்து அங்கத்தவர்கள் தங்கள் தங்களது ஆலோசனைகளைக் கூறினார்கள்.

புதுவருட உத்தியோகஸ்தர்களாக பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.-

தலைவர்- வ க. செல்லத்துரை, உபதலைவர்- ம மாணிக்கம், க. சண்முகசாமி, காரியதரிசி- இ. நாகராசா, உபகாரியதரிசி- சி. க. விஜயரத்தினம், தனாதிகாரி- அ. சிவசாமி, பாதுகாவலர்- கி. சிவபாதரத்தினம், நிர்வாகசபை அங்கத்தவர்களாக மேலும் 9 பேர் தெரிவு செய்யப்பட்டனர்.

மாலையில் நடைபெற்ற 17-வது ஆண்டு விழாவில் வலிவடக்கு காரியாதிகாரி திரு. தி. முருகேசபிள்ளை, மல்லாகம் கிராமசபைத் தலைவர் திரு. வே. ஞானசூரியன், புலவர் வேல்மாறன், திரு. நடராசா, பண்டிதர் ம. மாணிக்கம் ஆகியோர் கலந்து கொண்டு பேசினார்கள்.

கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

## உப்பு உற்பத்தி பாதிப்பு

சாவகச்சேரி செவ்வாய்

ஆனையிறவில் கடந்த வாரம் பெய்த மழை காரணமாக ஆனையிறவு அரசாங்க உப்பளத்தில் ... உற்பத்தி ... பாதிக்கப்பட்டுள்ளது.

## நாடும் நடப்பும்

ஒற்றைச் சில்லு வண்டி. அதன்மீது அழகான ஒரு 'நர்ஸ்' அமர்ந்திருக்கிறார். அவள் முகத்தில் மகிழ்ச்சிப் புன்னகை. அந்தவண்டியில் அவளைவைத்து ஒரு டாக்டர் வீதிவழியாகத் தள்ளிக்கொண்டு செல்கிறார். பலர் இக் காட்சியை வேடிக்கை பார்க்கின்றனர். 'நர்ஸ்' தனது கையில் ஒரு அட்டைவைத்திருக்கிறாள். "ஜோன்சனுக்கு வாக்களித்தேன். வெற்றி பெற்றேன்" என்று அதில் எழுதப்பட்டுள்ளது. டாக்டர் தனது கழுத்தில் ஒரு அட்டையைக் கட்டித்தொங்கவிட்டிருக்கிறார். அதில், "கோல்ட்வாட்டருக்கு வாக்களித்தேன். தோல்வியடைந்தேன்" என்று எழுதப்பட்டுள்ளது. இவர்கள் அமெரிக்க ஜனாதிபதியின் வாசஸ்தலமான 'வெள்ளை மாளிகை'யைத் தாண்டிச் செல்கிறார்கள்.

அமெரிக்கச் சஞ்சிகை ஒன்றில் இந்தக் காட்சியைப்படமாகக் கண்டேன். தேர்தல் பந்தயம் அங்கு அப்படி!

* * *

இங்கும் தேர்தலில் பந்தயம் பிடிப்பதுண்டு அதை நிறைவேற்றுபவர்களுமுண்டு. அரைமொட்டை, பாதிமீசை வழிப்பது இந்த தேர்தல் பந்தயத்தில் சில! இங்கும் ஒரு விசித்திரமான தேர்தல் பந்தயம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

தோம்பேயைச் சேர்ந்த ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஆதரவாளர்ஒருவர் சென்றபொதுத் தேர்தலில், ஐக்கிய தேசியக் கட்சி ஆட்சிக்கு வந்தால் தனது மனைவியையும் மூன்று வெள்ளாடுகளையும் கொடுத்துவிடுவதாக அவரது நண்பர் ஒருவருடன் பந்தயம் பிடித்திருந்தாராம். ஐ. தே. கட்சி ஆட்சிபீடமேறியதும் அவர் பந்தயத்தை நிறைவேற்றும் பொருட்டு தனது மனைவியையும் வெள்ளாடுகளையும் கொடுத்தாராம் பந்தயத்தில் வெற்றிபெற்றவர் வெள்ளாடுகளைமட்டும் வைத்துக்கொண்டு மனைவியைத் திருப்பிக் கொடுத்துவிட்டாராம்,

வெள்ளாடுகள் வருமானம் கொடுக்கும்...!

* * *

தேர்தல் முடிந்து தேர்தல் பந்தயங்களும் நிறைவேற்றப்பட்டு முடிந்துவிட்டன. ஆனால் இங்கு வடபகுதியில் எம்.பி.க்களுக்கு 'வரவேற்புக் கூட்டங்கள்' குறைந்தபாடாக இல்லை. வரவேற்புக்களிலாவது 'பேச்சாளர்'கள் சும்மா இருக்கிறார்களா? தேர்தல் பிரசார மேடைகளில் திட்டிய பழக்கம் இன்னும் விட்டுப்போகவில்லை!

* * *

வேலூர் நீதிமன்றத்தில் ஒரு சுவையான சம்பவம் நிகழ்ந்துள்ளது.

வேலூர் முதல்வகுப்பு மாஜிஸ்டிரேட் நீதிமன்றத்தில் விசாரணை செய்துகொண்டிருந்தபோது அவருக்குத் தேள் கொட்டியது. சமாளித்துப் பார்த்தும் முடியாதபோகவே விசாரணையைச் சிறிதுநேரம் ஒத்திவைக்க நேரிட்டது. மாஜிஸ்டிரேட் அணிந்திருந்த 'கவுனிலேயே' தேள் இருந்திருக்கலாம். 'மாஜிஸ்டிரேட்' ஊசி மருந்து ஏற்றிக்கொண்டார். மேசைக்கு அடியில்போய் ஒட்டிக்கொண்டிருந்த தேளுக்கு 'மரணதண்டனை' வழங்கப்பட்டது.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கட்ச் நிலைமை தீவிரமடைந்திருப்பதாய்

# யு தாண்ட் அறிவிப்பு

## அமெரிக்கா, பிரிட்டன் கவலை

## நேற்றைய சண்டையில் 250 பேர் பலி; பரஸ்பர தாக்குதல் தொடர்ந்து நீடிப்பு

நியூயோர்க், ஏப்ரல் 27

இந்தியாவின் கட்ச்-ரான் பகுதியில் நிலைமை தீவிரமாய் இருப்பதாயும், இருநாடுகளுக்குமிடையே இது ஓர் யுத்தமாகப் பரவாது எனத்தாம் நம்புவதாயும் ஐ.நா. பொதுக்காரியதரிசி யுதாண்ட் நேற்று நியூயோர்க்கில் அறிவித்தார். அதேசமயம் அமெரிககாவும், பிரிட்டனும் கட்ச்நிலைமை பற்றிக் கவலையடைந்திருப்பதாய் அறிவிக்கப் பட்டது.

நேற்றிரவு இந்தியப்பிரதமர் திரு. லால்பகதூர் சாஸ்திரி தனது மந்திரிசபை சகாக்களுடன் எல்லை நிலைமைபற்றி ஆலோசனை நடத்தினார்.

சமாதானமே இந்தியாவின் குறிக்கோள் என்றும், ஆனால் கட்ச்சிந்து எல்லையில் பாகிஸ்தான் தோற்றுவித்திருக்கும் ஆக்கிரமிப்பை உறுதியாகவும் பலனுள்ள முறையிலும் அது சமாளிக்கும் என்றும் திரு. சாஸ்திரி அதற்குமுன் கூறினார்.

### நோட்டம் பார்க்கிறது

நேற்று முன்தினம் 3 டாங்கிகளும், 8 கவச வண்டிகளும் பாகிஸ்தான் தரப்பில் காணப் பட்டதாயும், இது நோட்டம் பார்ப்பதற்கான நடவடிக்கையாய் இருக்கலாம் என்றும் அறிவிக்கப்பட்டது. பாகிஸ்தான் முழுமுறைத் தாக்குதல் நடத்தித் தோல்வியுற்று வடகிழக்கே பின்வாங்கியது என்றும், பின் மறுநாட் காலை பெரும்பலத்துடன் பாகிஸ்தான் துருப்புக்கள் பியர்பேட் மீது தாக்குதலை ஆரம்பித்தன என்றும் அறிவிக்கப்பட்டது

### 250 பேர் பலி

இந்திய தரப்பில் ஒரு முழு கம்பெனித் துருப்புக்கள் அதாவது 125 பேர் அழிக்கப்பட்டதாக பாகிஸ்தான் கூறியது டில்லியில் மறுக்கப்பட்டது. இந்தியத் தரப்பில் இந்தக் கொள்கைக்குக் குறைவாகவே ஆட்சேதமேற்பட்டதென்றும் பாகிஸ்தான் தரப்பில் 125 பேருக்குமேல் மாண்டதாயும் டில்லி அறிவிப்புக் கூறுகிறது.

எல்லையில் இந்தியத் துருப்புக்கள் தீவிரரோந்து நடத்தி வருவதாயும் அதேசமயம் பாகிஸ்தான் விமானப்படை விமானங்கள் எல்லைப்பகுதி மீது பறந்து வருவதாயும் மேலும் அறிவிக்கப்பட்டது.

மேற்கு பஞ்சாபில் சில மாதங்களாகவே பாகிஸ்தான் படைகள் பயிற்சியை நடத்தி வந்திருக்கின்றன. முஜாஹிர்களுடன் சேர புதிதாக ஆட்கள் திரட்டப்பட்டிருக்கின்றனர் என்றும் அறிவிக்கப்பட்டது;

### தொடர்ந்து சண்டை

யுத்த நிறுத்தமே பாகிஸ்தானின் குறிக்கோள் என ஜனாதிபதி அயூப்கான் அறிவித்திருக்கிறார். அதேவேளையில் இருதரப்பாரும் தொடர்ந்து சண்டையிட்டு வருகிறார்கள்

சிறுவர்குள்தான் பாகிஸ்தான் ஆக்கிரமிக்கப்படுகிறது என காஷ்மீர்பிரதமர் திரு ஸாதிக் கூறினார், தன் எல்லைகளைக் காக்க இந்தியா எல்லாத் தியாகங்களும் புரியும் என்றும் அவர் கூறினார்.

### திரிபுராவில் படைநுழைப்பு

திரிபுரா எல்லை நெடுகிலும் பாகிஸ்தான் துருப்புக்களைக் குவித்திருப்பதாக அறிவிக்கப் பட்டது.

சிட்டகங்குக்கு அடுத்த ஜாலியாவை பாகிஸ்தான் துருப்புக்கள் சட்டவிரோதமாய் இன்னும் தன்வசம்வைத்திருப்பதாய் அறிவிக்கப்பட்டது.

### கராச்சி குற்றச்சாட்டு

இந்திய விமானப்படைவிமானங்கள் மூன்றாவது தடவையாக பாகிஸ்தான் வானப் பிராந்தியத்தில் நேற்று அத்துமீறியதாக வெளிவிவகார அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கராச்சியிலுள்ள இந்திய ஹைகமிஷன் வெளிவிவகார அமைச்சுக்கு அழைக்கப்பட்டு இதுபம்பந்தமாக ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டதாயும் இதற்கு பதில் நடவடிக்கை எடுக்கும் என எச்சரிக்கப்பட்டதாயும் கராச்சி ரேடியோ அறிவித்தது.

# அப்துல்லாவின் முயற்சி தோல்வியடையும்

## கிருஷ்ணமேனன் பேச்சு

புதுடில்லி, ஏப்ரல் 27

காஷ்மீரிலிருந்து மட்டுமின்றி கட்ச மற்றுமுள்ள இடங்களிலிருந்தும் பாகிஸ்தானை வெளியேற்றுவதொன்றே பிரச்சினைக்கு பரிகாரம் என திரு. கிருஷ்ணமேனன் இங்கு ஒரு கூட்டத்தில் பேசும்போது குறிப்பிட்டார்.

"இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் நட்புறவு சாத்தியமே இல்லை. அப்படி முடியும் என்றிருந்தால் தேசப்பிரிவினையே ஏற்பட்டிராது" என்றுங்கிருஷ்ணமேனன் குறிப்பிட்டார்.

"காஷ்மீரில் வாக்கெடுப்பு நடத்த இந்தியா ஒருபோதும் ஒப்புக் கொண்டதில்லை. காஷ்மீரிலிருந்து பாகிஸ்தான் வாபஸாகி சட்டம், ஒழுங்குநிலைமை திரும்ப ஏற்பட்டால் காஷ்மீர் மக்களைக் கலந்தாலோசிப்பதாகத்தான் இந்தியா கூறிற்று. பாகிஸ்தான் வாபஸ்பெறவுமில்லை. பாகிஸ்தான் வசமுள்ள காஷ்மீரில் சட்டம், ஒழுங்கு நிலைமை திரப்படவுமில்லை. எனவே அந்தப் பேச்சே கிடையாது" என்றும் அவர் கூறினார்.

ஷேக் அப்துல்லா காஷ்மீரை ஒரு சர்வதேச பிரச்னையாக்கிவிட [illegible] ஆனால் எந்த [illegible] காட்டிலும் அவர் பேச்சு அம்பலம் ஏறவில்லை" என்றும் மேனன் கூறினார்.

## ம. பொ. சி. பயமுறுத்தல்

மதுரை, ஏப்ரல் 27

"மதுரையில் துவங்கப்படவிருக்கும் சர்வகலா சாலை, தமிழ் சர்வகலாசாலையாக இருக்க வேண்டும். அவ்வாறில்லையென்றால் சர்வகலாசாலை துவக்கநாள் முதல் கிளர்ச்சி நடத்தப்படும்" என தமிழரசுக்கழகத் தலைவர் ம. பொ. சிவஞானகிராமணியார் கூறினார்.

## எல்லையில் 20000 பாக். துருப்புகள்

புதுடில்லி, ஏப். 27

கட்ச்-சிந்து எல்லை நெடுக 20000 துருப்புகளடங்கிய முழுடிவிஷன் படையை பாகிஸ்தான் வைத்திருக்கிறது என்றும், இவற்றிற்கு இரு கவச மோட்டார் பிரிவு, பீரங்கிப் பிரிவுகள் ஆகியவற்றின் ஆதரவும் இருக்கிறதாம்.

## நேட்டால் காங்கிரஸ் நிர்வாகி தப்பினர்

டர்பன், ஏப். 27

நேட்டால் இந்திய காங்கிரஸ் முன்னாள் நிர்வாகிகளில் ஒருவரான திரு. மரிமுத்து பிரகலாதன் நாயக்கர் பெச்சுவானாலாந்துக்கு தப்பி ஓடிவிட்டார் என "ஜொஹான்னஸ்பர்க் சண்டே எக்ஸ்பிரஸ்" பத்திரிகை கூறியது. அரசாங்கம் வைத்துள்ள சப்பூனிஸ்ட் ஜாபிதாவில் அவருடைய பெயரும் உள்ளது.

வெள்ளையரல்லாத அரசியல் இயக்கத்தில் கடந்த 25 ஆண்டுகளாக ஸ்ரீநாயக்கர் தீவிர ஈடுபாடுடையவர். பலமுறை சிறை சென்றவர்.

## மைசூர் போரில் ராக்கெட் உபயோகம்

பெங்களூர், ஏப். 27

500 ஆண்டுகளுக்கு முன்பே மைசூர் யுத்தத்தின் போது ஸ்ரீரங்கப் பட்டினத்தில் இந்தியர்கள் தயாரித்த ராக்கெட்டுகள் பயன்படுத்தப் பட்டன என்றும், இந்த ராக்கெட்டுகள் பிரிட்டிஷாரை விரட்டியடித்தன என்றும் பாதுகாப்பு விஞ்ஞானக் கருத்தரங்கில் பேசிய பாதுகாப்பு மந்திரியின் விஞ்ஞான ஆலோசகர் டாக்டர் எஸ். பகவந்தம் கூறினார்.

## லோகியாவுக்கு செருப்பு வீச்சு

ஹைதராபாத், ஏப். 27

டாக்டர் ராம்மனோகர் லோகியா காங்கிரஸ் எதிர்ப்பு மகாநாடு ஒன்றில் பேசிக் கொண்டிருக்கையில் அவர் மீது ஒரு செருப்பு வீசப்பட்டது.

கூட்டத்திலிருந்து ஒருவர் மேடைக்கு வந்து அவர்மீது செருப்பை வீசினார். சிலர் அந்த நபரைத் துரத்திப்பிடிக்க முயன்றனர். ஆனால் அவர் வெளியே ஓடி ஒரு காரில் ஏறி தப்பிச் சென்று விட்டார்.

# வடவியட்னும் துருப்புக்கள் தெற்கில் சண்டையிடுகின்றன!

## பல நகரங்களில் அமெரிக்க எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

வாஷிங்டன், ஏப்ரல் 27

வட வியட்னும் தனது ஆக்கிரமிப்பை நிறுத்தும்வரை அதன்மீது அமெரிக்கா குண்டு வீசும் என பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா அறிவித்தார்.

தற்போதைய நிலையில் வியட்னுமில் அணு ஆயுதங்களை உபயோகிக்கவேண்டிய அவசியம் எழவில்லை என்றும் அவர் கூறினார்.

போர் விஸ்தரிக்கப்பட்டால் சீனுமீது தாக்குதல் நடத்தும் இலக்குகளை அமெரிக்கா தெரிவு செய்திருக்கிறது என்றும் மக்னமாரா அறிவித்தார். இதற்கிடையில் வடவியட்னும் தலைநகர் ஹானோயிலிருந்து வெளியேறத் தயாராயிருக்குமாறு சகல தூதராலயங்களுக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது' அமெரிக்க விமானத் தாக்குதலே இதற்குக் காரணம் என்றும் கூறப்பட்டது,

### எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள்

வியட்னுமில் அமெரிக்க குண்டுவீச்சை எதிர்த்து நேற்று ஜப்பானியத் தலைநகர் டோக்கியோவில் 3000 பேர் அமெரிக்க தூதராலயத்துக்கு முன் ஆர்ப்பாட்டம் செய்தார்கள்.

கம்போடியத் தலைநகரில் அமெரிக்க தூதராலயம் முன் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அமெரிக்க கொடி கிழித்தெறியப்பட்டு,' கல்மாரி பொழியப் பட்டது. சைகோனிலும் 1500 பேர் அமெரிக்கத் தூதராலயத்தை கல்மாரி பொழிந்து தாக்கினர்.

### புதிய கண்டுபிடிப்பு

இதற்கிடையில் தென் வியட்னுமில் முறையான வடவியட்னும் ராணுவம் பிரிவு ஒன்று சண்டையிடுவது முதல் தடவையாகக் கண்டுபிடிக்கப் பட்டிருப்பதாக அமெரிக்க பாதுகாப்பு மந்திரி திரு. மக்னமாரா கூறினார். இது வடவியட்னுமின் 325 வது படைப் பிரிவு என்றும் 500 துருப்புக்கள் அதில் இருப்பதாயும் அவர் அறிவித்தார்.

தென் வியட்னுமிலிருந்து அமெரிக்கத் துருப்புக்கள் வெளியேறவேண்டுமென கம்போடிய பிரதமர் இளவரசர் நரோடம் சிஹனோக் மீண்டும் வற்புறுத்தியிருக்கிறார்.

### 39 ஆயிரம் ஊடுருவல்

39000 வியட்காங்கியர் வடவியட்னுமிலிருந்து ஊடுருவியிருப்பதாயும், பலவாயிரக்கணக்கான வியட்காங்கியர் சண்டையில் இதுவரை கொல்லப்பட்டிருப்பதாயும் திரு. மக்னமாரா வாஷிங்டனில் கூறினார். அமெரிக்க விமானத் தாக்குதல் வியட்காங்கியரின் உறுதியைக் குலைத்திருப்பதாயும் இப்போது வியட்காங்கியருக்கு புதிதாக சீன ஆயுதங்கள் வழங்கப்பட்டிருப்பதாயும் அவர் கூறினார்.

### ஆண்டுக்கு 150 கோடி டாலர்

வியட்னும் யுத்த நிறுத்த நடவடிக்கைக்கு ஆண்டுதோறும் 150 கோடி டாலரை அமெரிக்க செலவிடுகிறது என்றும் மக்னமாரா அறிவித்தார்.

## ரோம் நகரில் பிரிட்டிஷ் பிரதமர்

ரோமாபுரி, ஏப்ரல் 27

பிரிட்டிஷ் பிரதமர் திரு. வில்சன் இத்தாலிக்கு 2 நாள் விஜயத்தை மேற்கொண்டிருக்கிறார்.

## கல்வியில் உலக சாதனை

லக்னோ, ஏப், 27

வாரணாசியைச் சேர்ந்த டாக்டர் ராம்குமார் சௌபே என்பவர் 71-வது வயதில் தொடர்ந்து உயர் கல்வி கற்று வருகிறார். அவர் இந்தியாவிலுள்ள பல்வேறு பல்கலைக் கழகங்களில் 18 பாடங்களில் எம். ஏ. பட்டம் பெற்று உலக சாதனையை ஏற்படுத்தியிருக்கிறார்.

டாக்டர் சௌபேக்கு இப்போது உடல்நலம் சரியில்லை. இருந்தும் 19-வது எம். ஏ. பட்டத்தை பெறுவதற்காக இப்போது பொருளாதாரத்தில் இரண்டாம் பாகம் படித்து வருகிறார்.

## கம்போடியாவுக்கு சர்வதேச உத்தரவாதம்

லண்டன், ஏப்ரல் 27

கம்போடியாவின் நடுநிலைமைக்கு உத்தரவாதம் அளிக்க சர்வதேச மகாநாட்டை கூட்டுவதென இந்தோ-சீன பற்றிய ஜெனிவா மகாநாட்டின் கூட்டுத்தலைமை நாடுகளான பிரிட்டனும், ரஷ்யாவும் இணக்கம் தெரிவித்திருக்கின்றன. அமெரிக்கா இதில் கலந்துகொள்ளச் சம்மதம் தெரிவித்திருக்கிறது.

## டொமினிகன் குடியரசு

சாந்தோ டொமிங்கோ, ஏப். 27

டொமினிகன் குடியரசிலுள்ள அமெரிக்க பிரஜைகளை வெளியேற்றும் பொருட்டு அமெரிக்க யுத்தக் கப்பல்கள் கரையில் நிற்கின்றன. அங்கு கிளர்ச்சிக் காரர்கள் ஆட்சியைக் கைப்பற்ற இன்னும் சண்டையிட்டுவருகிறார்கள். நேற்று ஜனாதிபதியின் அரண்மனை மீது அவர்கள் குண்டுகளைப் பொழிந்ததால் பலர் கொல்லப்பட்டனர்.

## இந்திய தலைமை நீதிபதி

புதுடில்லி, ஏப்ரல் 27

இந்திய தலைமை நீதிபதி திரு. கஜேந்திரகட்கர் இம்மாதம் 30-ம் திகதி அமெரிக்கா சென்று அங்கு ஒரு மாதம் சுற்றுப்பிரயாணம் செய்வார். பல அமெரிக்க பல்கலைக் கழகங்களிலும் சட்ட நிபுணர்கள் கூட்டங்களிலும் அவர் சொற்பொழிவு நிகழ்த்துவார். பின் இங்கிலாந்துக்கும், அதைத் தொடர்ந்து ரஷ்யாவுக்கும் அவர் விஜயம் செய்கிறார்.

## மைக்கேல்ஸ்காட்

புதுடில்லி, ஏப்ரல் 27

பழைநாகர்களுடன் அமைதிப்பேச்சுக்கள் நடைபெற்ற சமயத்தில் இந்தியத் துருப்புக்களுக்கு புதிய ஆயுதங்கள் வழங்கப்பட்டதாயும், துருப்புக்களை இங்கு இந்தியா பலப்படுத்தியிருப்பதாயும் சமாதானக் கமிட்டி அங்கத்தினர் திரு. மைக்கேல்ஸ்காட் குற்றஞ்சாட்டினர்.

## ரங்கூனில் சூ-என்-லாய்

ரங்கூன், ஏப்ரல் 27

சீனப்பிரதமர் திரு. சூ-என்-லாய் பாண்டுங் விழாவில் கலந்துகொண்டுவிட்டு, ஜகார்த்தாவிலிருந்து நேற்று ரங்கூனுக்கு விஜயம் செய்தார். பர்மிய தலைவர்களுடன் அவர் பேச்சு நடத்தினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தடைச்சட்டம் பற்றி ஆராயப்படும்

பருத்தித்துறை, செவ்.

வடபகுதியின் முக்கிய பிரச்னைகள் பற்றி மே மாதம் 5-ம் திகதியன்று உள்நாட்டமைச்சர் டாக்டர் டபிள்யு தகநாயக்கா கூட்டவிருக்கும் மகாநாட்டில் தற்போது கருப்பநீர் சேர்ப்பதில் இருக்கும் தடைச்சட்டம் பற்றியும் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரியவருகிறது.

இதுசம்பந்தமாக சீவல் தொழிலாளர்கட்கு உள்ள கஷ்டங்கள் பற்றியும் கருப்பட்டி உற்பத்திக்குறைவு பற்றியும் எம். பி.க்கள் விளக்கிக் கூறுவார்கள் எனவும் இதுவிடயமாக நடைபெறும் மகாநாட்டில் கலந்து கொள்ளும்படி கள்ளால் இலாகா கமிஷனரும் அழைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

---

## வட்டுக்கோட்டையில் இசை அபிவிருத்தி சங்கம்

வட்டுக்கோட்டை, செவ்.

'எமது மக்களிடையேதோன்றியுள்ள இசைப்பற்றும், கலை ஆர்வமும் நமது இசைக்கலைஞர்கள் கலை, இசை முதலியவற்றை வளர்ப்பதற்கு ஊக்குவிப்பதாக அமைந்துள்ளது. இசை தெய்வீகத் தன்மை வாய்ந்ததாகும். இறைவன் இசையில் இன்புற்று இசையின் பெருமையை உலகிற்கு எடுத்துக்காட்ட பல பொருள்களின் உதவிகொண்டு இசையை வளர்ச்சியுறச் செய்தார்' என்று திரு. வே. இராசமாணிக்கம் வட்டுக்கோட்டை சிவன் கோவிலில் சங்கீத அபிவிருத்தி சங்கமொன்றை அங்குரார்ப்பணம் செய்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

சங்கத்தின் நிர்வாகசபை உறுப்பினர்களாகக் கீழ்க்கண்டோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்கள்: திருவாளர்கள் வே. இராசமாணிக்கம், வே. சித்திவிநாயகம், இணைச் செயலாளர்கள்: திருவாளர்கள் கு. பா. செல்லையா, ச. மயில்வாகனம், பொருளாளர்: திரு. கு. தியாகராசா, உதவிப் பொருளாளர்: திரு. கி. பாக்கியநாதன். 18 பேர் கொண்ட நிர்வாகசபை அங்கத்தவர்களும் தெரிவுசெய்யப்பட்டனர்.

இவ்வருடம் ஆவணி மாதத்தில் வட்டுக்கோட்டை சிவன் கோவில் முன்றலில் ஓர் இசை விழா நடத்துவதெனவும் இக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## "மந்திரிகளின் சபதம் எங்கே?" எத்தர் பத்திரிகை கேட்கிறது

பம்பலப்பிட்டி, செவ்.

'ஐக்கிய தேசியக் கட்சி மந்திரிகள் தாங்கள் முந்திய அரசாங்கத்தினால் கட்டப்பட்ட அரசாங்க வீடுகளில் குடியிருக்கமாட்டோம் என்று பெருமிதமாகப் பேசியிருந்தார்கள். ஆனால் இன்று மூன்று மந்திரிகள் அரசாங்கக் கட்டடங்களில் இருப்பதற்குச் சென்றுவிட்டார்கள். நிதிமந்திரி திரு. யு. வி. வன்னிநாயகா, போக்குவரத்து மந்திரி திரு. ஹூலே, உணவு, விவசாய மந்திரி திரு. எம். டி. பண்டா ஆகியோரே அந்த வீடுகளுக்குச் சென்ற மந்திரிகளாவர். இந்தப் பெரிய மாடி வீடுகளின் வாடகை ரூபா 135 ஆகும்"

மேற்கண்டவாறு இம்மாதம் 28-ந் திகதி 'எத்தா' என்ற சிங்களப் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

அச்செய்தி மேலும் கூறியதாவது:-

முன்னாள் அரசாங்க மந்திரிகள் இந்த வீடுகளை உபயோகிக்கும்பொழுது முதலாளித்துவப்பத்திரிகைகள் பெரும் விதண்டாவாதம் செய்தன. இன்றைய தேசிய அரசாங்க மந்திரிகள் தாங்கள் இக்கவீடுகளை உபயோகிக்கமாட்டோம் என்று சபதம் செய்தனர். முன்னாள் அரசாங்கத்தின் அநேக மந்திரிமார்களுக்குக் கொழும்பில் வீடுகள் இல்லை என்பது உண்மை. ஆனால் இன்றை அரசாங்கத்தின் மந்திரிகள் பொதுப் பணத்தில் கட்டப்பட்ட வீடுகளை உபயோகித்துக் கொண்டும் சம்பளத்தைப் பெற்றுக்கொண்டும் இருக்கிறார்கள். இத்தனைக்கும் இவர்கள் பெரும்முதலாளிகள்,

---

பாரிஸ், ஏப்ரய 27

சோவியத் வெளிநாட்டு மந்திரி திரு. குரோமிகோ பாரிசுக்கு 5 நாள் விஜயத்தைமேற்கொண்டிருக்கிறார். ஜெனரல் டிகாலுடன் வியட்னாம் உட்பட பல பிரச்னை பற்றி அவர் விவாதிப்பார்.

## அலரிமாளிகையில் தானம் வழங்கப்படும்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

முதல் தடவையாக வெசாக் தினத்தன்று அலரிமாளிகையில் தானம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. வெளியிடங்களிலிருந்து ஆயிரக்கணக்கில் கொழும்புக்கு வரும் மக்கள் அலரிமாளிகையைச் சுற்றிப் பார்ப்பதற்கும், தேசிய அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் மந்திரிகளை அன்றைய தினம் அலரிமாளிகையில் பொதுமக்கள் சந்திப்பதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டுள்ளன. அலரிமாளிகையில் ஒழுங்கு செய்யப்பட்டிருக்கும் தானம் வழங்கும் வைபவத்துக்கும் பௌத்த மதத்தைச் சேர்ந்த பல்வேறு சங்கங்களும் ஆதரவுதருமாறு கல்விமந்திரி திரு ஐ. எம். ஆர். ஏ. இரியகொலை கேட்டுள்ளார்.

## விமானசபையின் புதிய தலைவர்

பம்பலப்பிட்டி, செவ்வாய்

இலங்கை விமான சேவைச் சபையின் புதிய தலைவராக நியமிக்கப்பட்டிருக்கும் திரு வி. கி. டி. சொய்ஸா நேற்றைய தினம் தமது பதவியை ஏற்றுக்கொண்டார். சபையின் புதிய அங்கத்தவர்களையும், உத்தியோகத்தர்களையும், டைரக்டர்களையும் சந்தித்து இலங்கை விமானசபையை எதிர்நோக்கியுள்ள பல்வேறு பிரச்னைகள் குறித்தும் திரு சொய்ஸா ஆராய்ந்தார்.

திரு. எம். டபிள்யு. எவ் அபயக்கோன் தமது பதவியிலிருந்து ராஜினாமா செய்ததைத் தொடர்ந்தே திரு. சொய்ஸா இப்பதவியில் நியமிக்கப்பட்டார்.—

## பூட்டோ லண்டன் செல்வார்

காராச்சி, ஏப். 27

சீட்டோ ராணுவக்கூட்டின் 10வது ஆண்டு விழாவில் கலந்துகொள்ளும்பொருட்டு பாகிஸ்தான் வெளிநாட்டு மந்திரி திரு. பூட்டோ லண்டன் செல்லவிருக்கிறார்.

அதேசமயம் மேதினக் கொண்டாட்டத்தில் கலந்து கொள்ளும்பொருட்டு இரு பாகிஸ்தானிய தூதுகோஷ்டிகள் பீகிங்குக்கும் மாஸ்கோவுக்கும் செல்லவிருக்கின்றன.

# பல இடங்களில் நாவுக்கரசர் குருபூசை

யாழ்ப்பாணம், புதன்

"மனித வாழ்வின் ஒவ்வொரு அம்சமும் விழாமயமாகவே காட்சியளிக்கின்றது. பிறந்த தின விழாக் கொண்டாடுகின்றோம். இறந்தவர்களுக்கு விழா எடுக்கின்றோம், ஆண்டவன் சந்நிதியில் விழாஎடுக்கின்றோம், இவ்வாறாக விழாக்களிலேயே நமது வாழ்நாளின் ஒரு பகுதியைச் செலவிடுகின்றோமே தவிர விழா எடுப்பதன் நோக்கத்தைப் புரிந்து கொள்பவர்கள் மிகச்சிலரேயாவர். மறைந்த பெரியார்களின் வாழ்க்கையைப் பின்பற்றுதற்காகவும் மற்றவர்களைப் பின்பற்றச் செய்வதற்காகவுமேவிழா எடுக்கின்றோமென்பதை இன்று பலர் மறந்துவிடுகின்றனர். இன்றைய தினம் தமிழர் வாழும் பகுதிகளிலெல்லாம் நாவுக்கரசர் திருநாளைக் கொண்டாடுகின்றனர். இன்றையிலிருந்தாவது சைவத்தைப் பின்பற்றியதால் தமிழ் உள்ளங்கள் ஒவ்வொன்றிலும் அழியா இடம்பெற்ற நாவுக்கரசரின் நெறியை இயன்ற அளவுக்குப் பின்பற்ற முயலவேண்டும்" இவ்வாறு யாழ்ப்பாணம் நாவலர் ஆசிரம மண்டபத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசநாயனார் குருபூசை விழாவில் பேசுகையில் புலவர் மு. கணபதிப்பிள்ளை குறிப்பிட்டார்.

வித்துவான் திரு. க. ந. நடராசா பேசும்போது: "நாவுக்கரசர் நமது சமயத்தைக்காத்த ஒருவீரன், சைவத்தின் மகிமையை நிலைநாட்டியவர். நமக்கு வழிகாட்டியாக விளங்கப் போகின்றவர்கள் அரசியல் வாதிகள்தான் என்பதை மறந்து ஒழுக்கத்தாலும் பண்பாலும் சீலத்தாலும் உயர்ந்த நாவுக்கரசரை நமக்கு வழிகாட்டியாகக் கொள்ளவேண்டும். அப்போது தான் நமது வாழ்வு வளம்பட முடியும்" என்று குறிப்பிட்டார்.

திருவாளர்கள் குமாரசுவாமிக் குருக்கள், பொ. அப்புக்குட்டி, மு. மயில்வாகனம் ஆகியோரும் உரை நிகழ்த்தினர். முதலியார் செ. முத்துத்தம்பி தலைமையில் குருபூசைவிழா நடைபெற்றது.

### கிளிநொச்சியில்

"நாயன்மார்களாகிய நீங்கள் நாயன்மார்களுடைய வரலாறுகளையும் அவர்களின் தெய்வ வழிபாட்டின் மகிமைகளையும் நன்கு கற்றுணர்ந்து அவ்வழிகளில் வாழ்வீர்களானால் எமது சமய பண்பாட்டின் பலனை அடையமுடியும்" என்று உருத்திரபுரம் பாலையடி செல்வவிநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற திருநாவுக்கரசநாயனார் குருபூசைக்கு தலைமை தாங்கிய அருட்திருவடிவேல் சுவாமி தமது தலைமையுரையில் கூறினார். குருபூசையை அப்பர் திருக்கூட்டத்து அடியார்கள் நடாத்தினார்கள்.

### மீசாலையில்

"நாயன்மார்களின் சரிதைகளை இளம்பராயத்திலேயே படிப்பதனால் சமய நம்பிக்கையும் கடவுள் விசுவாசமும் ஏற்பட்டு வாழ்வில் சிறந்த இலட்சியங்கள் உருவாகிவிடும் ஆகவே திருநாவுக்கரசநாயனாரின் தினத்தைக் கொண்டாடி, அவர் சரித்திரத்தை இப்படிப் படித்துப் பயன் சொல்வது மிகவும் சிறந்த பணியாகும்" இவ்வாறு கிராம்புவிலில் உள்ள மிருட்சிமடத்தில்நேற்று நடைபெற்ற குருபூசையில் தலைமை வகித்து உரையாற்றிய தென்மராட்சி சைவமகாசபை செயலாளர் திரு. ஆர். கி. சுப்பிரமணியம் கூறினார்.

### வல்வெட்டித்துறையில்

திருநாவுக்கரசநாயனார் குருபூசையை முன்னிட்டு அல்வாய் இந்து வாலிபர் சங்கத்தின் ஆதரவில் சங்க மண்டபத்தில் நேற்று மாலை விசேட குருபூசை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. அத்தருணம் பலர் சொற்பொழிவாற்றினர், இசை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

### சித்தங்கேணியில்

சித்தங்கேணி கலைநகர் இந்துசமய அபிவிருத்திச் சங்கத்தினர் திங்கட்கிழமை மாலை மன்றத்தலைவர் திரு. வீர. சுப்பிரமணியம் தலைமையில் திருநாவுக்கரசநாயனார் குருபூஜையை கொண்டாடினார்கள், குருபூஜையைத் தொடர்ந்து வீதிகளைச் சுற்றிக்கூட்டுப் பிரார்த்தனை செய்தபின்னர் நேருஜீ சனசமூகநிலைய முன்றலில் விழா நடைபெற்றது. விழாவில் ஆசிரியர் திரு. வீரவேந்தன், திருநாவுக்கரசநாயனாரைப்பற்றிச் சொற்பொழிவாற்றினர்.

---

## காங்கிரஸ் எம். பி.க்களுக்கு வரவேற்பு

பருத்தித்துறை, செவ்வாய்

மே மாதம் முதல் திகதியன்று அகில இலங்கைத் தமிழ்க்காங்கிரஸ் பாராளுமன்றப் பிரதிநிதிகள் மூவருக்கும் வரவேற்பொன்று நடைபெறவிருக்கிறது.

மாலிசந்தைப் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நடைபெறவிருக்கும் இந்த வரவேற்பில் நடந்த தேர்தலில் தமிழ்க்காங்கிரஸ் அபேட்சகர்களாகப் போட்டியிட்டவர்களும் கலந்துகொள்வார்களெனத் தெரியவருகிறது.





அருந்துக

நுவரெலியா

இது சிறந்த பியர் ஏனெனில்

* 100 வருட வடிமுறை அநுபவத்தைக் கொண்டு தயாரிக்கப்படுகிறது.
* 8 சர்வதேசபரிசுகளைச் சுவீகரித்தது.
* இதன் தனிப்பெரும் சுவையின் ரகசியம், தெளிவான, சுத்த நுவரெலியா நீரின் தன்மையேயாகும்.

மேலும், வடிமுறையில் முதிர்ந்த அநுபவமுடைய நால்வரால் உங்களுக்கென விசேஷமாக வடித்தெடுக்கப்பட்டது.

தெரிவதற்கு
பேல் ஏல்
லயன் லாகர்
ஜுபிலி ஏல்
சிங்ஹ பில்ஸ்னர்

சிலோன் புருவெரி லிமிட்டெட்



அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு

BAYER

மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்

METASYSTOX DIPTEREX

மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# "மேக சந்தேசம்" தமிழ்மொழி பெயர்ப்பு

## காளிதாசரின் சமஸ்கிருத மூலம்

சென்னை, ஏப்ரல் 27

காளிதாசனின் "மேக சந்தேசம்" என்ற சமஸ்கிருத நூலின் தமிழ் மொழி பெயர்ப்பை ஸ்ரீ கே. சந்தானம் வெளியிட்டார். ஸ்ரீ கே. ஆர். ஜமதக்னி இதை மொழி பெயர்த்திருக்கிறார்.

மொழி பெயர்ப்பு நூலை வெளியிட்டு சந்தானம் பேசுகையில் தென்னிந்தியாவில் சமஸ்கிருதத்தைப் பரப்புவதற்கு தக்ஷிண பாரத ஹிந்தி பிரசாரசபையைப்போல் ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்த வேண்டுமென யோசனை கூறினார்.

தமிழ், சமஸ்கிருதம் ஆகிய இரு மொழிகளிலும் பயிற்சி இருப்பது நல்லது என விழாவுக்குத் தலைமைவகித்த திரு டி. எல். வெங்கட்ராமையர் கூறினார்.

தமிழ், சமஸ்கிருதம் இரண்டும் சண்டை போட்டுக்கொள்ளுவதில் அர்த்தமேயில்லை என ஸ்ரீ சிவஞானகிராமணியார் கூறினார். ஸ்ரீ ஜமதக்னியின் தேசபக்தியையும், இலக்கியத் திறனையும் ஸ்ரீ ஏ. ஜி. வெங்கடாசாரி. ஸ்ரீ ஆக்டர் ஆனந்தாச்சாரி ஆகியோர் பாராட்டினார்கள்.

ஸ்ரீ காஞ்சிகாமகோடி பீடாதிபதிகளால் அனுப்பப்பட்டிருந்த சால்வை ஒன்று ஸ்ரீ ஜமதக்னிக்கு அளிக்கப்பட்டது.

## வானொலி நிகழ்ச்சிகள்

### 28-4-65

### கொழும்பு

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை: 6-45 உதயகீதம், 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-00 துதிப்பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

பகல்: 12-00 திரைகானம், 1-00 கதம்ப இசை.

மாலை: 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 இசை ஒலிப்பதிவுகள், 5-45 திரைப்பட இசை, 6-15 கிராமிய நிகழ்ச்சி, 6-45 புல்லாங்குழல் —ஆர். மூர்த்திஐயர், 7-30 உங்கள் பிரச்சினைகள், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 தாழவாத்திய இசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்த இசை.


REGAL – JAFFNA
NOW SHOWING
Glenn Ford
in
ADVANCE
TO THE REAR
(Panavision)

## பெண் எழுத்தாளர் ஸ்தாபனம்

புதுடில்லி, ஏப்ரல் 27

அகில பாரத பெண் எழுத்தாளர்கள் ஸ்தாபனம் ஒன்றையும், நாடுமுழுதும் அதற்குக் கிளைகளையும் அமைக்க இங்கு கூடியபெண்கள் கருத்தரங்கில் முடிவு செய்யப்பட்டது. சாகித்திய அகாடமியில் பெண்களுக்கு போதிய பிரதிநிதித்துவம் தரவேண்டும் என்னும் கருத்தரங்கு தீர்மானம் நிறைவேற்றியது.

கிங்ஸ்லி (கொழும்பு)
பிளாஸா (வெள்ளவத்தை)
ராஜ் (நீர்கொழும்பு)
நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு)
மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்)
தீவொளி (நுவரேலியா)
ஜுப்பிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

## 'சங்கடமான சமையலைவிட்டார்'

பாரிஸ், ஏப். 27

பிரெஞ்சு அதிபர் ஜெனரல் டி காலின் சமையற்காரர், விருந்தாளிகளை உபசரிப்பதிலுள்ள சிரமம் தாங்காமல் வேலையை விட்டே போய்விட்டார்.

"டி காலிடம் சமையற்காரராக இருக்கவேண்டுமானால் நம் உடம்பு கல்லால் கட்டி, சாந்தால் பூசப்பட்டிருக்க வேண்டும்" என அவர் கூறினார். 46 வயதான அவரது பெயர் பெரூட் கார்மியர். 1947-ம் ஆண்டு திரு. வின்சண்ட் அரியோல் ஜனாதிபதியாக இருக்கையில் அதிபர் மாளிகைக்கு அவர் சமையற்காரராகவந்தார்.

"எப்போதும் பத்துவிருந்தாளிகளாவது இருப்பார்கள் திடீரென்று டி கால், 200 விருந்தினர்களை அழைத்துவருவார். மன்னர்கள், அதிபர்கள், சினுக்காரர்கள் எல்லோரும் வருவார்கள். இதனால் எனக்கு உடம்பு ஆடிப்போய்விட்டது" என கார்மியர் கூறினார்.

## இந்தியாவில் ஏவுகணை உற்பத்தி

புதுடில்லி, ஏப்ரல் 27

தரையிலிருந்து வானத்திற்கும், வானத்திலிருந்து வானத்திற்கும் செல்லும் ஏவு கருவிகளின் உற்பத்தி இந்தியாவில் இப்போது நடைபெற்றுவருவதாய் அறிவிக்கப்பட்டது.

## "கவர்னர் பதவி வேண்டாம்"

புதுடில்லி, ஏப். 27

குஜராத் ராஜ்ய கவர்னர் பதவியை ஏற்கும் படி கேரள பிரதேச காங்கிரஸ் கமிட்டியின் தலைவர் திரு. மாதவன் நாயர் அழைக்கப்பட்டிருந்தார். ஆனால் அதை ஏற்றுக் கொள்ள அவர் மறுத்துவிட்டார்.

## கிராமசபைஊழியர் வருடாந்த கூட்டம்

சுழிபுரம், செவ்வாய்

அகில இலங்கை கிராமசபை ஊழியர் சமாஜத்தின் வருடாந்தபொதுக் கூட்டம் இவ்வாரம் பதுளையில் நடைபெற இருக்கிறது. இதற்கான சகல ஒழுங்குகளையும் சமாஜத்தினர் கவனித்து வருகின்றனர். இவ்வருடாந்தக் கூட்டத்தில் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வம் கலந்து கொள்வார். யாழ்ப்பாணத்திலிருந்து நூற்றுக்கு மேற்பட்ட ஊழியர்கள் இம்மகாநாட்டில் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

சொந்தக்காரர்களுக்கு

## பதவிகள்

### சிங்கள தினசரி கருத்து

பம்பலப்பிட்டி, செவ்வாய்

திருவாளர்கள் இ. ஏ. தர்மபால, ஸ்டான்லி ரத்வத்தை, டி. லிவேரா இ போ. ச. நிர்வாகிகளாக நியமிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுள் திருவாளர்கள் தர்மபாலாவும், லிவேராவும் ஐக்கிய தேசியக் கட்சியின் சார்பில் பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டிருந்தார்கள். கண்டி மாநகரசபை ஐக்கிய தேசியக் கட்சி மேயர், திரு. ஏ. சி. எல். ரத்வத்தையின் சகோதரர் திரு. ரத்வத்தை ஆவர். இவருக்கு ஒரு மோட்டார் கராஜும் உண்டு. திரு. ஏ. டபிள்யு ஏ. அபயகுணசேகரா கொழும்பு துறைமுகக் கூட்டுஸ்தாபனத்திற்கு நிர்வாகியாக நியமனம்பெற்றுள்ளார். இவர் ஐக்கிய தேசியக் கட்சி சார்பில் களனித் தொகுதியில் போட்டியிட்டவராவர். இவர் துறைமுகக் கொந்தராத்துக்காரர்களிலும் ஒருவராவர்.

இவ்வாறு இம்மாதம் 23ந் [illegible] பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

## பல்கலைக்கழகத்தில் துப்பாக்கிப்பிரயோகம்

புதுடில்லி, ஏப்ரல் 27

அலிகார் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்ததுகாரணமாக உபவேந்தர் உட்பட 8 பேர் காயமடைந்தனரென்றும் பொலிஸார் நிலைமையைச் சமாளிக்கத் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனரென்றும் அறிவிக்கப்பட்டது.

## பெரிய உள்ளம்

புதுடில்லி, ஏப்ரல் 27

ஆசிரிய க்ஷேமநல நிதிக்காக கடந்த 6 மாதகாலமாக ஒரு ஆசிரியர் தம் சம்பளத்தில் பாதியை நன்கொடையாக அளித்துவருகிறார். அவரது சம்பளம் ரூபா 90.

இந்தத் தகவலை கல்விமந்திரி திரு. சக்ளா லோகசபையில் வெளியிட்டார்.

அந்த ஆசிரியர் தமது பெயரை வெளியிடாமலிருந்து வருகிறாரென்றும் ஏழைமக்கள் எவ்வளவு பரந்த உள்ளம் படைத்தவர்களென்பதை இது காட்டுவதாயும் மகிழ்ச்சி ஆரவாரங்களுக்கிடையே அவர் கூறினார்.

## மனோகரன் கண்டனம்

புதுடில்லி, ஏப்ரல், 27

ஆட்சிமொழிச் சட்டத்தில் திருத்தம்செய்யத் தாமதம் ஏற்படுவது குறித்து லோகசபையில் திரு மனோகரன் (தி. மு. க.) கண்டனம் தெரிவித்தார்.

## கல்கத்தாவுக்கு காங்கிரஸ் மேயர்

கல்கத்தா, ஏப்ரல் 27

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திரு. ராய்சௌத்ரி கல்கத்தா மேயராகத் தெரிவு செய்யப்பட்டார்.

## ஷேக் அப்துல்லா

மெக்கா, ஏப்ரல் 27

மெக்காவில் நடைபெற்ற உலக முஸ்லிம் மகாநாடு முஸ்லிம்களின் சுயநிர்ணயக் கமிட்டியொன்றை நியமித்திருக்கிறது. ஷேக் அப்துல்லா இதில் ஒரு மெம்பராகச் சேர்த்துக்கொள்ளப்பட்டிருக்கிறார்.

## கெய்ரோவில் பூட்டோ

கெய்ரோ, ஏப். 27

பாகிஸ்தான் வெளிவிவகார மந்திரி பூட்டோ நேற்று கெய்ரோவந்து சேர்ந்தார். நாசர் இங்கு தங்கியிருக்கும் அவர் ஜனாதிபதி நாஸருடன் பேச்சுக்களை நடத்துவார்.

## இடமாற்றத்தை நிறுத்த முயற்சி

சுழிபுரம், செவ்வாய்

இவ்வருட நடுப்பகுதியில் நடைபெற இருக்கும் ஆசிரிய இடமாற்றத்தை உடனடியாக நிறுத்துமாறு கோரும் தீர்மானம் ஒன்றை வலிகாமம் மேற்கு பகுதியில் உள்ள பெற்றோர் ஆசிரியச் சங்கங்கள் கூட்டாகச்சேர்ந்து கல்வி மந்திரிக்கு அனுப்புவதற்கு துரித நடவடிக்கை எடுத்து வருகின்றன.

## அரைகுறை வீடுகள்

சுழிபுரம், செவ்வாய்

இப்பகுதியில் புதிய வீடுகள் கட்டிய பலர் சீமெந்து கிடைக்காததால் தங்கள் வீடுகளை பூரணமாகக் கட்டமுடியாது கஷ்டப்படுகிறார்கள். அரைகுறையில் தமது கட்டடவேலைகளை விட்டு சீமெந்துக்கு 'தவம்' கிடக்கவேண்டிய அர்ப்பாக்கியம் இவர்களுக்கு கிடைத்துள்ளது. சீமெந்து சுழிபுரம் கிராமசபையினர் உடனடியாக வழங்கவேண்டும் என்று அரசாங்க அதிபரையும், காரியாதிகாரியையும் வேண்டியுள்ளனர். கடந்த நாலுமாதங்களாக இப்பகுதி [illegible] உள்ளவர்கள் சீமெந்து பெறுவதற்கு எடுத்துக் கொண்ட எந்த நடவடிக்கையும் பலனளிக்கவில்லை

## வரி விளம்பரம்

### சோதிடம்

விஞ்ஞான முறையில் ஜாதகம் கணித்துக்கொடுப்பதற்கு ரூபா 3/- பிறந்த திகதி, சரியான நேரம், இடம் அனுப்பவும். சோதிட ஆராய்ச்சி நிலையம், ஆத்தியடி, பருத்தித்துறை. 204

### தேவை

சேர்க்குலேசன் (Circulation Manager) மனேஜராகக் கடமைபுரியக்கூடியவர் தேவை. சம்பளம் ரூபா 125/- பிணை பணம் ரூபா 1000/- (ரொக்கம்) உடனே செலுத்தக்கூடியவர் 29-4-65 வியாழக்கிழமை காலை நற்சான்றுபத்திரங்களுடன் நேரில் சமூகம் கொடுக்கவும். உரிமையாளர்: தமிழ்நேசன் பத்திரிகைக் காரியாலயம், 30, பேங்ஷால் வீதி, யாழ்ப்பாணம். 97

1-ம் திகதி தொடங்கி 15-ம் திகதி வரைக்கும் சென். ஜோன்ஸ் கலாசாலையில் நடைபெறவிருக்கும் பொருட்காட்சி விளம்பரகூடத்தில் வேலைசெய்வதற்கு திறமையான பெண்கள் தேவை. நேரில் வரவும். நவரட்னம் அன் கோ, 8, புர்மா மொஸ்க் லேன், யாழ்ப்பாணம். 98

யாழ்ப்பாணத்தில் நடந்துகொண்டிருக்கும் ஒரு அரிசிமில்லைக் குத்தகைக்கோ அல்லது பங்காகவோ நடாத்த ஆள் தேவை. விண்ணப்பிக்கவும்: வ. மகாலிங்கம், மில்லேன், மல்லாகம். 206

### விற்பனைக்கு

நல்ல நிலைமையிலுள்ள Ch தொடர் இலக்க A 40 கார் விற்பனைக்குண்டு. விலாசம்: 12, வேம்படி ஜேட், யாழ்ப்பாணம் 99

### மனேஜர் தேவை

சங்கானை கிழக்கு ப. நோ. கூ. சங்கத்தின் 1-ம் டிப்போவுக்கு மனேஜர் தேவை. தகைமை: J. S. C தராதரமும் கூட்டுறவுப் பயிற்சியும், சமீபத்தில் பெற்ற இரு நற்சாட்சிப் பத்திரமும், 22—45 வயதுக்குட்பட்டவர். பிணை- ரூபா ஆயிரம் உரொக்கம் ரூபா ஆயிரம் ஆதனம். சம்பளம்: மாதம் 80 ரூபா தொடக்கம். விண்ணப்பகாலம்:- 28-4-65—8-5-65 மாலை 6 மணிவரையும். முகவரி:- ச. கந்தசாமி காரியதரிசி, சங்கானை கிழக்கு ப. நோ. கூ. சங்கம், சங்கானை [illegible]

### கல்வி

சகல பாடங்களும் (விஞ்ஞானம், கலை, வர்த்தகம்) பூமொழியில் படிக்க விரும்பினால் விண்ணப்பிக்கவும். மா. புவனேந்திரன், வர்த்தகக்கல்வி நிலையம், திருநெல்வேலி. 95

### CLASSES

Admissions accepted for Intensive Revision Classes conducted for CentralClerical/ Apothecaries Entrnce Examinations.

UNITED INSITUTES, Nelliady, Karavedi. 107, Point Pedro Road, Nallur, Jaffna. 202

## அரவம் தீண்டி மரணமானர்

கிளிநொச்சி, செவ்வாய்

உருத்திரபுரம் சிவநகரை சேர்ந்த சதாசிவம் மகன் சுப்பிரமணியம் (30) என்பவர் புகையிலைத் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த போது அரவம் தீண்டி சுமார் மூன்றரை மணித்தியாலங்களின் பின் மரணமானர். 'புடையன்' என்றஇனப் பாம்பே இவரை தீண்டியதாகக் கூறப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "தொகுதிவாரியாக இரத்ததானம் செய்க!"

## தமிழ் வாலிபர்களுக்கு மந்திரி திருச்செல்வம் கோரிக்கை

மாவிட்டபுரம், செவ்வாய்

யாழ்ப்பாணம் இரத்த வங்கியில் இரத்தம் இல்லாத அவல நிலையைப் பற்றி சமீபத்தில் பத்திரிகைகளில் செய்தி வெளியாகியிருந்தது இப்படியான இரத்தத்தட்டுப்பாடு ஏற்படக் காரணம் என்னவென்று ஆராய்ந்தபோது இரத்த வங்கிக்குத்தேவையான இரத்தம் சிறைக் கைதிகளிடமிருந்து பெறப்பட்டது என்பதுவும் சத்தியாக்கிரகத்தின்பின் சிங்களக் கைதிகள் யாழ்ப்பாணம் இரத்த வங்கிக்கு இரத்தம் வழங்க மறுத்துவிட்டார்களென்பதுவும் தெரிய வந்தது. இப்படியான நேரத்தில் தமிழுக்காக இரத்தம் சிந்தவும் தயாராக உள்ளோம் என்று கோஷமிடும் தமிழ் வாலிபர்கள் என்ன செய்கிறார்கள்? தமிழர்களின் மரியாதையை காப்பாற்றுவதற்காவது உடனடியாகத் தொகுதி வாரியாக தொண்டர்களை இரத்தம் வழங்குமாறு தமிழ் அன்னையின் பெயரால் கேட்டுக்கொள்ளுகிறேன்.

தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மைதானத்தில் அமைக்கப்பட்ட "வன்னியசிங்கம் அரங்கில்" நடைபெற்ற கூட்டத்தில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றிய ஸ்தலஸ்தாபன அமைச்சர் திரு மு திருச்செல்வம் மேற்கண்டவாறு கூறினர்.

இக்கூட்டம் காங்கேசன்துறைத் தொகுதிப் பாராளுமன்ற அங்கத்தவராக தமிழரசுத்தந்தை திரு செல்வநாயகம் தெரிவு செய்யப்பட்டமை குறித்து அன்னாரைக் கௌரவிக்கு முகமாக திரு சி கந்தவனம் தலைமையில் நடைபெற்றது.

திரு திருச்செல்வம் மேலும் குறிப்பிட்டதாவது: தமிழரசு அங்கத்தவர் என்றமுறையிலும் தந்தை செல்வநாயகத்தின் பூரண சம்மதத்துடனும் தான் நான் தேசிய அரசாங்கத்தில் மந்திரியாகச் சேர்ந்தேன் எங்கள் இழந்த உரிமைகளை பெறுவதற்காக நாம் தேசிய அரசாங்கத்துடன் சேரத்தீர்மானித்தோம் எங்கள் பிரச்னைகள் எங்கள் விருப்பத்திற்கு இணங்க சுமுகமாகத் தீர்க்கப்படும்வரை அமைதியாக இருக்கும்படி மக்களைக் கேட்டுக் கொள்கிறேன்

தேர்தலில் மக்கள் காட்டித் தந்த வெற்றியினால் தமிழ் பேசும் இனத்திடமிருந்து பறிக்கப்பட்ட சில உரிமைகளை மீட்க ஒரு வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது, இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி இழந்த உரிமைகளை மீட்க வேண்டியது எமது கடமை, அதை உணர்ந்த நாம் ஐக்கியதேசியக்கட்சிக்கு ஒத்துழைப்பைக் கொடுத்துள்ளோம். இதை ஒரு பரீட்சார்த்தமான ஒத்துழைப்பு என்றே கருத வேண்டும், உண்மையான சத்தியாக்கிரக அறப்போருக்கு ஆயத்தமாக இருப்பதுடன்சத்திய அடிப்படையிலே வாழக்கூடிய சமரசத்திற்கும் ஆயத்தமாக இருக்க வேண்டும் இத்தத் தன்மையில் இயங்குகின்ற தமிழரசுக்கட்சி சமரசத்தை நாடி ஒத்துழைப்பைக் கொடுத்திருக்கிறது.

திரு. செல்வநாயகத்தின் மகன் திரு. சந்திரகாசன் பேசுகையில் பெரும்பான்மையினமாகிய சிங்களச் சமூகத்தினரும் சிறுபான்மையினராகிய தமிழ்ச் சமூகத்தினரும் சேர்ந்து நடத்தும் இணைப்பாட்சியாகிய சமஷ்டி ஆட்சி ஒன்றுதான் எங்களுக்கு நிரந்தர பரிகாரம் தரக்கூடியதாக இருக்கும் என்றார்.

### விசுவாசத்துடன் ஒத்துழைப்போம்

வட்டுக்கோட்டைப் பிரதிநிதி திரு அ அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது:-

தனிமனிதனின் வாழ்வைப் போலவே ஒரு இனத்தின வாழ்விலும் மேடுபள்ளங்கள் தோன்றிக்கொண்டேவரும் கடந்த ஒன்பது ஆண்டுகளும் தமிழ் இனத்தின் சரித்திரத்தில் மிகவும் இருள் சூழ்ந்தகாலமாக இருந்தது இன்று சற்று நம்பிக்கை ஒளி தோன்றியிருக்கிறது கடந்த ஒன்பது ஆண்டுகளாக நாம சத்தியநெறியில் நின்று நடத்திய போராட்டங்கள் ஓரளவு பலனைத்தரக் கூடிய சூழ்நிலை ஏற்பட்டிருக்கின்றது சென்ற வாரம் நடைபெற்ற சிம்மாசனப் பிரசங்க விவாதத்தின் இறுதியில் வகுப்புவெறுயைக்கிளப்பியவர்கள வெட்கித் தலைகுனியவேண்டிய நிலைஏற்பட்டது எமது உரிமைகள் பரிபூரணமாகக் கிடைத்து விடுமென்று நாம கூறவில்லை ஆனால் ஓரளவுக்கு தமிழ்மொழியின் அந்தஸ்து, மாவட்டசபைகள், எமது பிரதேசப் பாதுகாப்பு ஆகியவை கிடைக்குமென்பது பிரதமர் டட்லி சேனநாயக்காவின் பேச்சிலிருந்து நம்பிக்கையாகத் தெரிகிறது நம்பிக்கையுடன் விசுவாசமாக ஒத்துழைப்போம் தமிழ் அரசுக் கட்சியின தலைமையின்கீழ் தமிழ்ப்பேசும் சமுதாயத்தை மேலும் ஒன்று சேர்ப்போம்

ஊர்காவற்றுறைப் பிரதிநிதி திரு வி நவரத்தினம் பேசுகையில் குறிப்பிட்டதாவது:-

"தமிழ் பேசும் இனத்தின் பூரண விடுதலையைகாண வேண்டுமென்றால்தந்தைசெல்வநாகம் தந்ததாரகமந்திரியாகிய தமிழரசைப பெற்றால் அன்றி வேறு வழியில்லை. அதுதான் எமது லட்சியமான இடைசியம். அந்த இலட்சியத்தை நோக்கி அயராது நடக்க வேண்டும். ஆயினும் கடந்த பொதுத்

தெல்லிப்பழை கூட்டுறவு வைத்தியசாலைக்கு அருகாமையிலிருந்து தலைவர்கள் அலங்கரிக்கப்பட்ட ஜீப் வண்டிகளில் ஊர்வலமாக மேளதாளத்துடன் அழைத்துவரப்பட்டார்கள். சுமார் ஒருமைல் நீளத்திற்கு வீதி மூவர்ணக்கொடிகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப் பட்டிருந்தது. வீடுகள்தோறும் பூரண கும்பம் வைத்து தலைவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப் பட்டது.

---

லண்டன், ஏப்.26

லண்டனிலுள்ள இலங்கையர்களின் குழந்தைகள் சிங்களத்தில் பயிற்சி பெறுவதற்காக, இலங்கை மாணவர் சங்கத்தில் நேற்று சிங்கள வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது.

இலங்கை ஹைகமிஷனர் டாக்டர் ஜி. பி. மலலசேகரா சிங்கள வகுப்பை ஆரம்பித்து வைத்தார்.

# மந்துவில் இரட்டை கொலை வழக்கு

சாவகச்சேரி, செவ்வாய்

மந்துவில் இரட்டைக் கொலைவழக்கில் குற்றப்பத்திரிகை இன்று காலை சாவகச்சேரி மஜிஸ்திரேட் கோர்ட்டில் நீதிபதி திரு ரூபேட் சில்வா முன்னிலையில் சாவகச்சேரி பொலிசாரால் தாக்கல் செய்யப்பட்டது.

இவ்வழக்கில்மந்துவிலில் கே சுப்பிரமணியம், கே. சித்திரா ஆகிய இருவரையும் கொலை செய்ததாகவும், கிட்டினன் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் அதே ஊரைசசேர்ந்த கதிரன் நாகமுத்து நவரத்தினம் ஆகியோர் மீது குற்றஞ் சுமத்தப்பட்டுள்ளது.

கடந்தவாரம் மந்துவில் மயானத்தில் பிரேதமொன்றை தகனம் செய்ய சென்றபொழுது நடைபெற்ற இச் சம்பவத்தில் சுப்பிரமணியமும் ,சித்திராவும் ஸ்தலத்திலேயே மரணமானார்கள் என்பதும் கிட்டினர் ஆபத்தான நிலையில் யாழ்ப்பாணம்ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார் என்பதும வாசகர்கள் அறிந்ததே சந்தேக நபருள் ஒருவரான நவரத்தினம் தலைமறைவாகத்திரிவதால் அவர்மீது பகிரங் "வாரண்ட்" பிறப்பிக்கப்பட்டுள்ளது. க. நாகமுத்து ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளார் மேல்விசாரணை அடுத்தவாரம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது. நகாமுத்து சார்பில் திருவாளர் செல்லத்தம்பி சி, பாலகிருஷ்ணன் ஆகியோர் ஆஜரானார்கள்.

---

### விற்பனைக்கு

பாவிக்கப்பட்ட "ஆக்கோ" டாக்ஸி மீற்றர் விற்பனைக்கு உண்டு தேவையான விபரங்கட்கு கீழ்க்கண்ட விலாசத்தில் விசாரிக்கவும் திருநாவுக்கரசு கராச், ஆனைப்பந்தியடி, யாழ்ப்பாணம். 207

---

## மரண அறிவித்தல்

### கந்தையா-கிருஷ்ணபிள்ளை

காலஞ்சென்ற கந்தையா, செல்லாச்சி ஆகியோரின் அருமைப்புதல்வரும், சுப்பிரமணியம், குலசிங்கம், சாவித்திரி ஆகியோரின் அருமைச் சகோதரரும் இராசையாவின் (யானைச்சோடா யாழ்ப்பாண விநியோகஸ்தர்) மைத்துனருமான கிருஷ்ணபிள்ளை அவர்கள் (மனோகரா தியேட்டருக்கு முன்னால் தேநீர்க்கடை நடத்தியவர்) காலமாகிவிட்டார், அன்னாரது பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக இன்று (28-4-65) மாலை 4 மணியளவில் யாழ்ப்பாணம் சிவன் பண்ணை வீதியிலுள்ள 65-ம் இலக்க இல்லத்திலிருந்து வில்லூன்றி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். 208

---

## மரண அறிவித்தல்

### — G. S. செல்லையா —

செல்வமலரின் அன்புக்கணவரும் அரியமலர், அனந்தராஜன் (சென்ஜோன்ஸ் கல்லூரி), மகிழ்மலர், கருணராஜன் (அரசாங்கஸ்டோர்ஸ்), ரஞ்சிதமலர் (மாத்தளை பாக்கிய வித்தியாலயம்), ஜோய், மனோ, லலித், சாந்தில், ரஞ்சோ ஆகியோரின் தந்தையுமசாமுவேல், பத்மா, கதிர்காமர், மனோன், அருட்செல்வம் ஆகியோரின் மாமனருமான ஒய்வுபெற்ற கோப்பாய் கிறஸ்தவ கல்லூரி அதிபர் ஜி. எஸ். செல்லையா காலமானார் அன்னாரின் ஈமக்கிரியைகள் நாளை வியாழக்கிழமை காலை 8-30

# சூறாவளியால் பாதிக்கப்பட்ட இடங்களை இருமந்திரிகள் பார்வையிடுவர்

## வவனியா மாவட்டத்துக்கு விரைவில் விஜயம் செய்வர்

வவுனியா, செவ்வாய்

கடந்த டிசம்பர் மாதம் வீசிய கடும் சூறாவளி காரணமாக வவனியா மாவட்டத்தில பாதிக்கப்பட்ட இடங்களைச் சமூகசேவைகள் மந்திரி திரு அசோகா கருணாரத்னவும் ஸ்தலஸ்தாபன மந்திரி திரு எம். திருச்செல்வமும் ஒன்றாகச் சென்று நேரில் பார்வையிடவிருக்கிறார்கள்,

வவுனியா எம். பி. திரு டி. சிவசிதம்பரம் இரு மந்திரிகளையும் தனித்தனியாகச் சந்தித்து, வவனியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட இடங்களை இருவரும் ஒன்றாகப் பார்வையிடுவது அவசியம் என வற்புறுத்தியதின் பேரில் இரு மந்திரிகளும் விரைவில் வவனியாவுக்கு விஜயம் செய்யவிருக்கின்றனர்.

இரு மந்திரிகளும் கூட்டாக இப்பகுதிக்கு விஜயம் செய்து பாதிக்கப்பட்ட இடங்களை நேரில் பார்வையிட்டு செய்ய வேண்டிய நிவாரண, புனருத்தாரண உதவிகள்பற்றி சிபார்சு செய்வார்கள்.

சூறாவளி காரணமாக தங்கள் வீடுகளை முற்றாக இழந்தவர்களுக்கு "தலா 80 ரூபாவை மட்டுமே சுாபந்து அரசாங்கம் வழங்கியிருக்கிறதெனவும் இதற்கென; ஆனால் காப்ந்து அரசாங்கத்திடம் 900,000 ரூபா சேர்ந்திருக்கது எனவும் எம் பி, மந்திரிகளிடம் சுட்டிக் காட்டியுள்ளார்.

பல்லாயிரக்கணக்கான விவசாயிகளுக்கு வாழ்வளிக்க உடனடி நிவாரண வேலைகள் செய்யப்படவேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட தெருக்களையும் மின்சார இணைப்பு கருவிகளையும் திருத்த உள்ளூராட்சி மன்றங்களுக்கு போதிய நிதி உதவி அளிக்கவேண்டும் எனவும்மாவட்டத்தில் உள்ள ஏழு குடியேற்ற திட்டங்களில் பழுதடைந்த வீடுகளைத் திருத்த நிதி உதவி அளிக்கவேண்டுமென்றும் முல்லைத்தீவு கரையோரபகுதியில் மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டிருந்த மீனவர்களுக்கு புனர்வாழ்வளிக்க நிதி உதவியும் வேறு உதவிகளும் செய்யவேண்டுமெனவும் வவனியா எம். பி இரு மந்திரிகளிடமும் கூறியிருந்தார்.

---

# காதல் விவகாரம் தெரிந்ததால்தற்கொலை

யாழ்ப்பாணம், புதன்

தமது காதல் விவகாரம் தமது தமையனுருக்குத் தெரிய வந்து, அவரது கண்டனத்துக்குஆளாகிவிட்ட காரணத்தினால் மனக்கசப்படைந்து தான் தனது பேத்தியார் தற்கொலைசெய்துகொண்டிருக்கலாம் என கோப்பாய் வடக்கைச் சேர்ந்த நாகரத்தினம் என்ற 21 வயது யுவதியின் மரணவிசாரணையின்போது சாட்சியமளித்த அவரது பேத்தியான சிதம்பரத்தை தெரிவித்தார்.

திடீர்மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் முன்னிலையில் அவர் தொடர்ந்து சாட்சியமளிக்கையில் கூறியதாவது:-

சம்பவம் நடந்ததினம் மத்தியானம் நாகரத்தினம் தனது தமையனுருக்கு உணவு பரிமாறினர். பின்னர் சிறிது நேரத்தில் அவரைக் காணாது தேடிப்பார்த்தபோது வீட்டு வளையில் மாட்டப்பட்டிருந்த கயிற்றில் கழுத்தில் சுருக்கிட்ட நிலையில் அவர் தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டோம்

எனது பேத்தியார் நல்லநாதன் என்பவரைக் காதலித்துவந்தார். அது அவரது தமையனுருக்குத் தெரியவந்து அவரைக் கண்டித்தும் பேசியிருந்தார்.

காலஞ்சென்றவரின் சகோதரி கண்மணி, தமையனர், டாக்டர் சிவஞானசுந்தரம் ஆகியோர் சாட்சியமளித்தனர் தற்கொலையெனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

# கிளிநொச்சியில் பட்டின சபை

## எம். பி. கொடுத்துள்ள முன்னறிவித்தல்

கிளிநொச்சி, செவ்வாய்

கிளிநொச்சி பட்டினத்தையும் பரந்தனையும் அடக்கியதாக புதிய பட்டினசபை ஒன்று நிறுவுமாறு கோரும் தீர்மானமொன்றை பார்லிமென்டில் எடுத்துக்கொள்வதற்கென கிளிநொச்சி எம்.பி பண்டிதர் க, பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். கிளிநொச்சிப்பகுதியில் மூன்று கிராமசபைகள் அமைக்க கோரும் பகுதியும் அந்த தீர்மான முன்னறிவித்தலில் அடங்கியுள்ளது.

முன்னறிவித்தலின் வாசகம் வருமாறு:-

கிளிநொச்சிப் பட்டினத்தையும் பரந்தனையும் அடக்கியதாக ஒரு பட்டினசபையை நிறுவுவதற்கும், கரைச்சி கிராமசபைக்குள் அடங்கியபகுதியை பின்வருமாறு மூன்றாகப் பிரித்து அம்மூன்று பிரிவுகளிலும் மூன்று கிராம சபைகளை நிறுவுவதற்கு உடனடியாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

கண்டிவீதிக்கு மேற்கேயுள்ள பகுதி, கண்டி வீதிக்கும் பரந்தன்-தருமபுரம் வீதிக்குமிடைப்பட்ட பகுதி, கண்டி வீதிக்கும் பரந்தன்-தருமபுரம் வீதிக்கும் ஆனையிறவுக் கடலுக்குமிடைப்பட்ட பகுதி.

கிளிநொச்சித் தொகுதியிலுள்ள பின்வருமிடங்களுக்கிடையில் பஸசேவையை நடாத்த விரைவில்நடவடிக்கைமேற்கொள்ளப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது.

கிளிநொச்சிக்கும் பூநகரிக்கும். வட்டக்கச்சிக்கூடாக கிளிநொச்சிக்கும் இராமநாதபுரத்துக்கும், இயக்கச்சிக்கும் முள்ளியானுக்கும் பூநகரிக்கும் பொன்னாவெளிக்கும், கிளிநொச்சிக்கும் வன்னேரிக் குளத்திற்கும்,

---

# பாதிக்கப்பட்டோருக்கு நிவாரணம்

யாழ்ப்பாணம், செவ.

கடந்த சூறாவளியில் கடல்நீரால் பாதிக்கப்பட்ட இடங்களுக்கு ஒரு ஏக்கருக்கு ரூபா 340 வீதம் உதவிப்பணமாக கொடுக்கப்படவேண்டுமென்று நேற்று நடைபெற்ற யாழ்-மாவட்ட விவசாய சபைக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது, பூனகரியிலும் வேறு பல இடங்களிலும கடல் நீரால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இந்த உதவி கொடுக்கப்படும் எனத் தெரியவருகிறது.

---

# தபாற் கந்தோரை தரம் உயர்த்துக

யாழ்ப்பாணம், செவ்,

சங்கானை பட்டினசபை மாதாந்தக் கூட்டத்தில் சங்கானை உப-தபாற்கந்தோரை பிரதான தபாற் கந்தோராக்க வேண்டும் என்றும், கூட்டுறவு வர்த்தக நிலைக்களம் ஒன்று சங்கானை சந்தையில் நிறுவவேண்டுமென்று தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன சபைக் கூட்டத்திற்கு பட்டின சபைத் தலைவர் திரு க. அம்பலவாணர் தலைமை வகித்தார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org